எதற்காக எழுதுகிறேன்?

எழுத்து

41

ஆர். ஷண்முகசுந்தரம்

க. நா. சுப்ரமண்யம்

வல்லிக்கண்ணன்

லா. ச. ராமாம்ருதம்

சி. சு. செல்லப்பா

ந. பிச்சமூர்த்தி

தி. ஜானகிராமன்

கு. அழகிரிசாமி

ஜெயகாந்தன்

ஆர்வி

சாலிவாஹனன்

மே 62

காசு 50

இலக்கிய வட்டம் கருத்தரங்கு

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல்தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஆண்டுச் சந்தா ரூ. 5-00 வெளி நாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதப்பட வேண்டும்.

4-ம் ஆண்டு
ஏடு 41
மே - 62

தமிழ் இலக்கியத்தில் முச்சங்க காலத்தைப் பற்றி குறிப்பிடுவதுண்டு. அது போல 1945ல் 'இலக்கிய நண்பர்கள்' ஆக பிறந்து, 1954ல் ஒரு தடவையும் இப்போது மூன்றாம் தடவையாக மறு ஆரம்பமாகி இருக்கும் 'இலக்கியவட்டம்' க. நா. சுப்ரமண்யம் முயற்சிகளுள் ஒன்று. சென்ற 8-4-62ல் சென்னையில் 'எதற்காக எழுதுகிறேன்' என்ற தலைப்பில் முதல் வரிசை படைப்பாளர் பத்துப்பேர் பேசினார்கள். அதாவது எழுதிப் படித்தார்கள். குறிப்பிடத்தக்கதாக இருந்த இந்த கருத்தரங்கம் எழுத்து வாசகர்களுக்கும் பயன்பட இந்த ஏடு அந்த கருத்தரங்க கட்டுரைகளுக்காகவே முழுக்க முழுக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப்பற்றிய குறிப்புகளுடன் க. நா. சு. அளிக்கிறார். லா. ச. ரா. படித்த கட்டுரை 'நான்' எழுத்து 4வது ஏட்டில் ஏற்கெனவே வெளியாகி இருக்கிறது.

—ஆசிரியர்.

ஆர். ஷண்முகசுந்தரம்

*கோவை ஜில்லா வாசிகளையும், கிராமத்துச் சூழ்நிலையையும் வைத்து அவர் எழுதியுள்ள நாவல்களில் **நாகம்மாளும் அறுவடையும்** மஹோன்னதமான சிருஷ்டிகள். பல சிறுகதைகளும் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்ப்புகளும் எழுதியிருக்கிறார். நவசக்தியில் கதம்பம் என்று தலைப்பிட்டு அவர் எழுதிவந்த பத்திகள் அவருடைய அரசியல் அறிவைக் காட்டுகின்றன. அடக்கமான ஹாஸ்யமும், சுருங்கச்சொல்லி விளங்க வைத்தலும் அவர் எழுத்தின் சிறப்பு.*

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பே, எனக்குள் நானே 'எதற்காக எழுதுகிறேன்? என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டேன். அப்படிக் கேட்கும்படியான ஒரு நிலையை மணிக்கொடிக் காரியாலத்திலிருந்து எனக்கு வந்த கடிதம் தூண்டி விட்டது. என்னுடைய முதல்கதையை பிரசுரத்திற்கு ஏற்றுக் கொண்டு ஆசிரியருக்காக கி. ரா. கடிதம் அனுப்பித்திருந்தார். அந்தக் கடிதத்தில், 'இந்தக் கதை உங்கள் சொந்தக் கற்பனை தானா? எனக் கேட்டிருந்தார்.

ஆம். நூற்றுக்கு நூறு என் சொந்த கற்பனைதான். இன்னொருத்தர் கற்பனையைக் கூட தன் கற்பனை என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் அதை இந்த உலகம் நம்புமா?

இரவல் சரக்கு, மாரீசப் போர்வை—முதலான, வார்த்தைகளை ரொம்ப நாட்களுக்குப் பிறகு நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன்! அந்த நாளில் 'மணிக்கொடிக் கடிதம் எனக்கு வந்த போது அளவிலா ஆனந்தம் அடைந்தேன். அதே சமயம், 'நான் எதற்காக எழுதுகிறேன்? என்ற கேள்வியும் உள்ளத்தில் உதித்தது.

'உலகத்தை உய்விக்கும்' நோக்கம் எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை' நான் எழுதினாலும் எழுதாவிட்டாலும் கெட்டுத் தொலைகிறதாக இவ்வுலகம் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டால் இந்த உலகைத் தடுத்து நிறுத்தி விட நம்மால் முடியுமா? ஐயா! நீங்கள் எழுதாவிட்டால் இலக்கியத்துக்குப் பெருநஷ்டம்! என்று என்னிடம் எவரும் சுட்டிக் காட்டவில்லை. 'ஆத்மத் திருப்திக்காக எழுதினேன்!, என்று ஒரு பெரிய பொய்யை சொல்லவும் நான் தயாராக இல்லை, பின்னே எதற்காக எழுதினேன்?

ஒரு இலக்கிய ஆசிரியன் 'ஏன் எழுதுகிறான்?' என்பதை அந்தந்தக் காலத்திற்கு ஏற்ப, சமய சந்தர்ப்பம் சூழ்நிலைக்கு ஒத்தவாறு பதில் அளிக்க வேண்டியிருக்கிறது, ஆரம்பத்தில் இதே கேள்விக்கு நான் அளித்த பதில் ஐந்து வருஷத்திற்கு முன் பொருந்தாது. ஐந்து வருஷத்திற்கு முன்னர் நான் சொன்ன பதிலை இன்று சொல்வதாக, இருந்தால் வேறு விதமாகத்தான் கூற வேண்டி இருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கு தெளிவு படுத்தி விட வேண்டும். சங்கீதம் வெள்ளமாக வழிந்து ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த அற்புத இசை வெள்ளத்தில் மிதக்காமல் ஒருவர் ஆனந்தமாகக் குறட்டைவிட்டுத் தூங்குகிறார். பரத நாட்டியத்தைப் பார்த்துப் பரவசப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சிலர் மட்டும் அரட்டையில் மூழ்கி இருக்கிறார்கள், புத்தம் புது புத்திலக்கியங்கள் எதிரே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றைத் தலைக்கு வைத்துக்கூட படுக்க விரும்பாத மகானுபாவர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ரஸனை, என்கின்ற ஒரு பொருள் ஒவ்வொரு இதயத்திலும் ஒவ்வொரு வியப்பைபெய்கிறது. எனக்கு படிப்பதில் பிரியம். இலக்கியத்தில் ஆசை. சிறு வயதிலிருந்தே சதா படித்துக் கொண்டிருப்பேன். புதிய சிருஷ்டிகளைக் கண்டபோது என் இதயத்திலும் இச்சை பிறந்தது. நானும் ஏதாவது எழுத எண்ணினேன். ஆவல் மிகுதியால் ஒரு கதையை எழுதினேன். முதற்கதை பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கேள்விக்குறியும் நெஞ்சிடைச் சுழித்தது!

ஆரம்பத்தில் எனக்குள்ள ஆர்வத்தினால் எழுதினேன். அன்று என்னுடைய பதில் அது. இரண்டு

மூன்று வருஷங்களுக்குப் பிறகு பத்திருபது சிறுகதைகள் படைத்து, சரத்சந்திர சட்டர்ஜியின் நாவல்கள் இரண்டொன்றை மொழிபெயர்த்த பின்னர், அமரர் கு. ப. ரா.வோடு நெருங்கிப் பழகிக்கொண்டிருந்த நாளில், "கிராமத்து ஜனங்களை நன்ருக அறிந்திருக்கிறீர்கள். நாவல் எழுதுவதுதானே?" என்று கு. ப.ரா. கூறினர்.

'நாகம்மாள்' நாவலை ஒரு மாதத்தில் எழுதி முடித்தேன். நண்பர் கு.ப.ரா. உண்மையில் மகிழ்ச்சி அடைந்தார். அன்றைக்கும் இன்றைக்கும் எனக்கு என்ன எழுதுவதென்ருலும் 'முடுகீடு' ஒன்றும் வரவேண்டியதில்லை. எந்த நேரமும் பேனுப்பிடித்தால் நிற்காமல் நிறுத்தாமல் எழுதவேண்டியதுதான். அடித்தல் திருத்தல்களுக்கு இடம் வைத்துக் கொள்ளமாட்டேன்.

நாவல் துறையில் தீவிரமாகச் சிந்தையைச்செலுத்தினேன் நகரத்து வாழ்க்கையைப் பலரும் கையாள முற்பட்டிருந்ததால் கிராம மக்களைச் சித்திரிப்பதென் பதை நோக்கமாக நான் தேர்ந்தெடுக்கவில்லை. கிராமத்து ஜனங்களின் மூர்ச்சனையையே படம் பிடிக்கக் கருதினேன். அவர்களுடைய பேச்சுக்களை — பேசும் தமிழிலே எழுதினேன். பாத்திரங்கள் உரையாடல்கள் 'கொச்சை'யாக இராமல் செந்தமிழிலா இருக்கும்? ஒரு பகுதி மக்களின் வாழ்வை—உண்மையான வாழ்வை—நேருக்கு நேராக அனுபவிக்க பிற பகுதி மக்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டாமா? சாரத்தை நீக்கிவிட்டு சக்கையைத் தந்து என்ன பயன்?

பொழுதெலாம் இலக்கிய சர்ச்சை! நாளெலாம் கதை கவிதைப் பேச்சு! விடிய விடிய கலைக் கடலுள் நண்பர்களோடு நீந்தி விளையாடினேன். என் விருப்பத்திற்கு இயைந்த, எனக்கு உவப்புத் தருகிறசரியான தொழிலைத்தான் தேர்ந்து எடுத்திருக்கிறேன் என்று பூரித்துப் போனேன். உலகத்துத் தலை சிறந்த நாவல் ஆசிரியர்கள்போல்—மற்ற நாட்டு கீர்த்திமிக்க இலக்கியாசிரியர்கள் போன்று—நானும் ஒரு துறையில்—யாருமே காட்டாத. தொடாத, விண்டுரைக்க மாட்டாத சுவைகளை. இனிமைகளை, லளிதங்களை எழில்ததும்ப நிறைத்து விடுவது என்கின்ற வெறியோடு எழுதினேன்! ஆம், அதை ஒரு வெறி என்றே குறிப்பிட வேண்டும் மோகம் என்ருல் வார்த்தையில் வடிக்க முடியாத அதிசய மோகம் அது!

நான் பிறந்து வளர்ந்த கொங்குநாட்டுக் கிராமத்தையும், அங்கு நான் பழகிய கிராம மக்களையும் உள்ளது உள்ளபடி எழுத்தில் சித்திரிப்பது என்ற பேரார்வம் எனக்குள் துளிர்த்தது. அந்த ஜனங்களின் விருப்பங்கள், துயர்கள், வேடிக்கை விமரிசைகளை வனப்புடன் தீட்டிவிடத் திட்டமிட்டேன்! ஒவ்வொரு சிறு காரியத்தையும் நுட்பமாகக் கவனித்தேன்! கவனிப்பது என்ன? என் இதயத்தில் வீற்றிருந்த வடிவுகளுக்கு உயிர் கொடுத்தேன். 'ஏனய்யா இவர் எழுதினர்?' என்ற கேள்வியை மற்றவர்கள் கேட்காத வரைக்கும் 'சக்தியானுசாரம்' ஏதோ செய்திருக்கிறேன்.

பத்து வருஷம் எழுதிக் குவித்து விட்டு ஒரு நாள் நிர்ப்பந்தமாக 'இதெல்லாம் எதற்கு?' என்று எண்ணத் தொடங்கினேன். பொருளாதாரப் பிரச்னை வருகிறது. ஆக பொருளாதாரத்தைச் சீக்கிரம் தீர்த்துக் கட்டிவிட்டு இலக்கிய விசாரத்தில் ஆழலாம்! சுருக்கமாக பொருளாதாரத்தை விளக்க முயல்கிறேன்.

என் புத்தகங்களை மற்ற பிரசுரகர்த்தர்கள் பிரசுரித்தார்கள், அழகிய அமைப்பு! நல்ல அச்சு! கவர்ச்சியான பைண்டு! கண்ணைப்பறித்தது கட்டுக்கோப்பு! ஆனல் 'கை நிறைய'வில்லை! 'இந்த வருவாய் போதாது!' என்ற சிந்தனை தோன்றவே, 'சொந்தமாகப் பிரசுரித்தால் இன்னும் அதிகப் பணம் வரும்! நிறைய எழுதலாம்! சேவையை விரிவு படுத்தலாம்!' என்று கருதினேன். என் சொந்த நிலையத்திலிருந்து தமிழ் புத்தக உலகுக்கு சீரிய பணிகள் புரியலானேன்! அதுவும் அனுபவத்தில் அலுப்பைத் தந்தது! இந்தத் தண்டமிழ் நாடுதான் பக்குவப் படவில்லையோ? அல்லது நம்முடைய பேரிலக்கியங்கள்தான் எடுபடவில்லையோ? என்று எல்லாவற்றிற்கும் பெரிய முழுக்காகப் போட்டுவிட்டு ஒரு பத்து ஆண்டுகள் மௌனத்தில் ஆழ்ந்தேன்! அதாவது இந்த எழுத்து சமாச்சாரத்தையே அறவே மறந்து விட்டேன். எதற்காக எழுதுகிறேன்? நமக்கும் புண்ணியமில்லை உள்ளத்தையும் ஏன் வாட்டிக்கொள்ளவேண்டும் என்று வாளாவிருந்தேன். இப்போது நிலைமை மாறிவிட்டது! எவ்வளவு வளர்ச்சி பாருங்கள்!' என்று அன்பர்கள் வாதிக்கலாம்! ஒரு விதத்தில் அது ஓர் 'வாதனை' என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம். யார் யாரோ எங்கெங்கோ போகிறவர்கள் இத்துறையில் புகுந்து கொண்டு பாழ்படுத்துகிருர்கள்! குட்டிச் சுவராக்குகிருர்கள்!' என்று கூறுவதையும் நான் ஒப்புக்கொள்வதில்லை. எழுத்தை நம்பி 'நன்ருக' வாழும்—'நன்ருகப் பிழைக்கின்ற எழுத்தாளர்கள் தமிழ் நாட்டில் எத்தனை பேர் இருக்கிருர்கள்? விரல்விட்டு எண்ணி விடலாமா? ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகம் எழுதினேம் வாழ்ந்தோம், என்ற நிலை இருக்கிறதா? பின்னே என்னவோ பிரமாதமாக வாதிடக் கிளம்புகிறீர்களே? கூழைக் குடித்ததிற்கு ஒரு வேளை சோறு மேல்!' என்று சொல்வதில் என்ன பெருமை' என்ன அபிவிருத்தி? அதை மகா மகா வளர்ச்சி என்று பறை சாற்றுவது சரியென்று எனக்குத் தோன்றவில்லை.

ஒரு விரக்தி என்று வைத்துக்கொள்ளுங்களேன். நான் ஒதுங்கி இருந்தேன். ஆனல் அருமை நண்பர் க. நா. சு. அவர்கள் சும்மாவிடவில்லை! அவரால் சும்மா இருக்கவே முடியாது. மறுபடியும் கொஞ்ச காலமாக 'இலக்கிய சேவை' புரிய முற்பட்டிருக்கிறேன்.

இப்போது எதற்காக எழுதுகிறேன்? சுத்தமாக பணத்திற்காக எழுதுகிறேன் என்று சொல்லிக்கொள்வதில் நான் வெட்கம் கொள்ளவில்லை! இன்றைய புகழ் பெற்ற பிரஞ்சு நாவலாசிரியர் சமீபத்தில் ஒரு கட்டுரையில், 'நான் அமெரிக்க புத்தகக் கம்பெனிக்கு ஒரு புத்தகமும், ரஷ்ய புத்தகக் கம்பெனிக்கு ஒரு புத்தகமும் தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்ருர். ஆம் வீடு கட்டும் என்ஜினீர் மாதிரி, பணம் கொடுத்தால்—நாவலோ, சரித்திரமோ—தயார் செய்து கொடுக்க வேண்டியதுதானே?

பட்டினி கிடந்து செத்துக்கொண்டே எழுதிக் கொண்டிருக்கவேண்டும் என்கின்ற சித்தாந்தத்தையே நான் அடியோடு மறுப்பவன்! 'பாலும் பழரசமும் தந்தால் என்னவேண்டுமானுலும் எழுதுவீரோ? எந்தக் கட்சிக்கும் எழுதித் தருவீரோ?' என்று நையாண்டி பண்ணுதீர்கள். கட்சியாவது சுண்டைக்காயாவது? வீட்டிலுள்ள உயிர்கள்—நம்மை நம்பி இருக்கின்ற ஜீவன்கள் சோர்ந்து, கிடக்கையில், 'என் கொள்கை, என் லட்சியம்' என்று அலட்டிக்கொள்வதில் என்ன

பிரயோஜனம்?

தனிமனிதன், குடும்பம் இவற்றின் மீது பணத்திற்குள்ள ஆதிக்கம் குறைந்தால்—ஆட்டிவைக்கும் சக்தியைப் பணம் இழந்துவிடுகிற நிலை ஏற்பட்டால்—அப்போது—'எதற்காக எழுதுகிறேன்?' என்கின்ற கேள்விக்கு நான் அளிக்கும் பதில் ஒரு தனிக்காவியமாக இருக்கும்!

சி. சு. செல்லப்பா

'எதற்காக எழுதுகிறாய்' என்று என்னை சாக்ரடீஸ் கேட்டிருந்தால் நான் என்ன பதில் சொல்லி இருப்பேன்? கவிகளைப் பார்த்து, அவர்கள் இயற்றிய கவிதைகளுக்கு என்ன பொருள் என்று அவர் கேட்டதுக்கு, அவர்கள் தங்களை காட்டிக் கொண்ட விதம் போலவா, வேறு எப்படி? கவிகள் தாங்கள் செய்திருப்பது என்ன என்பதை உணர்ந்து அறிந்து செய்திருப்பார்கள் என்று சாக்ரடீஸ் நம்பி அவர்களிடம் அந்த கேள்வியைக் கேட்டார். ஆனால் அந்த கவிகளால் பொருள் என்ன என்பதை சொல்ல முடியவில்லையாம். அதிலிருந்து சாக்ரடீஸ் கட்டின முடிவு இது :

'I soon found that poets do not compose poetry because they are wise but because they have a certain nature of genius which is capable of enthusiasm'.

மேலும்,

'Like prophets and oracular persons who also say many fine things without knowing what it is they are saying.'

என்கிறார். சாக்ரடீஸ் கட்டின முடிவு சரியானது. ஒரு கவியைப் பார்த்து அவன் இயற்றிய கவிதையின் பொருள் என்ன என்று அவனையே கேட்பது அவன் விவேகத்தை (wisdom) பரீட்சிப்பதாகும். தங்கள் கவிதைகளை தாங்களே விமர்சிக்கும்படி அவர்களை அழைத்தார் சாக்ரடீஸ். அது அவர்களுக்கு இயலவில்லை என்பதை அவர் கண்டறிந்தார் என்பதை குறிப்பிடுகிறார் பிரிட்டிஷ் விமர்சகர் லாசெலஸ் அ:பர்கிராம்:பி.

இப்போது சுமார் நூறு சிறுகதைகள், இரண்டு நாவல்கள், கணிசமான அளவுக்கு பொதுப்படையானதும் விமர்சனரீதியானதுமான கட்டுரைகள் இவைகளை எல்லாம் ஒரு கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எழுதிவந்திருக்கும் என்னைப் பார்த்து 'எதற்காக எழுதுகிறாய்' என்று கேள்வி போடப்பட்டிருப்பதாக வைத்துக் கொண்டாலும் சரி; இல்லை அப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டிருப்பதான பிரமையில் ஏதோ பதில் சொல்ல வேண்டிய கடமை தனக்கு இருப்பது போல, சமாதானம் சொல்லவேண்டியவன் என்று உணர்ந்தது போல, 'நான் எதற்காக எழுதுகிறேன்' என்று உரத்து சிந்திக்கிறதாக இருந்தாலும் சரி, இந்த விஷயம் என் விவேகம் சம்பந்தமானது, சாக்ரடீஸ் கேள்வி போல.

இந்த கேள்வி மூலம் என் விவேகத்தை பரீட்சிப்பதாகவே இருக்கட்டும். அப்போது, என்ன உந்துதல் உனக்குள்ளே இருந்து உன்னை எழுதச் செய்கிறது? அல்லது என்ன நினைப்பு மூலம் விளையும் ஒரு மூலக் கருத்து உன் எழுத்துக்கு பகைப்புலமாக அமைகிறது? அல்லது என்ன உத்தேசம், நோக்கம் அடிப்படை உன் எழுத்துக்கு? இவைகளில் ஏதோ ஒன்றுக்கு என்னிடம் பதில் எதிர்பார்க்கப்படுகிறது அல்லது உரத்து சிந்திக்கிற நான் தீர்மானித்துக்கொள்ள வேண்டியவன் என்று நினைக்கிறேன்.

நிஜமாக, 'எதுக்காக எழுதுகிறேன்' என்று இதுவரை நான் நினைத்துப் பார்த்ததே கிடையாது. சாக்ரடீஸ் கேள்வி கேட்ட கவிகளும் சாக்ரடீஸ் விரும்பிய விதமாக பொருள் பற்றி சிந்தித்து வைத்திருக்கவில்லை. அதனால்தான் பின்னாலிருந்து முதுகில் திடீரென குத்தப்பட்டதாக வந்த கேள்வி முன் விழித்து நின்றார்கள். சாக்ரடீஸ் அவர்களைப்பற்றி மேலே கண்ட முடிவுக்கு வரச் செய்ய இடம் கொடுத்தார்கள். அதே போலத்தான் இன்றைய சாக்ரடீஸ்களான உங்கள் கேள்வி முன் விழித்து நிற்கிறேன் நான். உண்மையாக இவை எழுதுகிறபோது கூட எனக்கு எதுவும் திட்டமாகவில்லை. இன்னத்துக்காக என்று எவ்விதமும் நான் உறுதியாக நம்பி நீங்களும் நம்பும்படியாகச் செய்யத்தக்க காரணம் எதும் நிச்சயப்படவில்லை எனக்குள். இருந்தாலும் இந்த மாதிரி ஒரு கேள்விக்கு பதில் எதிர்பார்க்கப்படுவது இயல்பு. இந்த கேள்வி மீது சிந்தித்துப் பார்க்க முயற்சிக்கிறேன்.

முதலில் நான் இதை சொல்லி விடுகிறேன். ஒரு படைப்பாளியாகவே நான் இதை பார்க்கிறேன்—அதாவது நடைமுறை விவகார அடிப்படையில் இல்லாமல் கற்பனை அடிப்படையில் உருவான இலக்கியப்பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் ஒரு எழுத்தாளனாக. இது என் எல்லையை குறுக்கிக் கொண்டதாக இருந்தாலும் பல அனாவச்யமான, புறம்பான கேள்விகளுக்கு இடம் இல்லாமல் செய்து விடுகிறது. யதார்த்த பூர்வமான நடைமுறை உலக வாழ்வுக்குத் தேவையான வகையில் அறிவுரீதியாக விவகாரமாக சிந்திக்க வேண்டிய எழுத்துப்போக்கு ஒன்று. இவை அத்தனைக்கும் கற்பனைச் சாயல் ஏறி, ஒரு தோற்ற உலகில் சஞ்சரிக்கச் செய்யும் ஒரு எழுத்துப் போக்கு மற்றொன்று. இந்த வித்தியாசத்தைக் கொண்டு நான் பிந்தினதை தேர்ந்தெடுத்துக்கொள்கிறேன்.

எனவே முதலில் எனக்கு கேட்டுக் கொள்ளத் தோன்றுகிற கேள்வி, நான் எதுக்காக இந்த கதை, நாவல், அல்லது கவிதை எழுதுகிறேன் என்பதுதான். நான் நேர்மையாக நடந்து கொண்டு உண்மையை நான் பேச நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். இந்த கேள்விக்கு நேரடியான பதில் ஒரு வரியில் சொல்ல முடியுமா என்பது எனக்கு சந்தேகம். எனவே என் முதல் சிறுகதையை உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டு பேசுகிறேன். அதிலிருந்து ஏதாவது தெரியவருமா என்று பார்க்கலாம்.

மார்கழி மாதம்; கிராமத்து பனிக்காலை. வீட்டுக்கு வீடு பெரிய பெரிய கோலம் போட்டு பூஷணி, பரங்கி பூக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். என் வீட்டு வாசலிலும், ஒரு குழந்தை நின்று இதையே பார்த்துக் கொண்டு நிற்கிறது. அந்த பார்வை எனக்குள் ஒரு உணர்வு, விழிப்பு, கிளர்ச்சி — எதாவது வைத்துக் கொள்ளுங்கள் ஏற்படுகிறது. உடனே, தன் வீட்டு முன் பூவைக்க இயலாத நிலை, ஏழ்மை, ஆசை, திருட்டு நினைப்பு இதெல்லாம் ஒன்றின் விளைவாக மற்றொன்றாக

கற்பனை செய்து, விவகாரமாக கோர்வைப் படுத்தி ஒரு கதை உருவாகிறது. அது 'மார்கழி மலர்' இங்கு 'கதை வடிவமான விதம்' பற்றிய பேச்சில்லை. இதை எதுக்காக எழுதினேன்' என்பது கேள்வி.

ஒருவர் சொல்லக்கூடும்: ' பொருளாதார ஏற்றத் தாழ்வு வாழ்வுநிலையை அடிப்படையாகக் கொண்டு, அதன் அவல நிலையை விண்டுகாட்டும் ஒரு நோக்கம் உங்களுக்குள் இருந்ததன் விளைவாக என்று. அவர் அம்மாதிரி சொல்வதுக்கு இடம் இருக்கிறது. அதுக்கு ஆதாரம் அந்த கதையில் கிடைக்கிறது.

இன்னொரு கதையைப் பார்ப்போம். கிராமத்து மாலைநேரம் : குழந்தைகள் கண்ணாமூச்சி ஆட்டம் விளையாடிக்கொண்டிருக்கின்றன. எதிர் திண்ணையில் ஒன்றரை வயதுக்குழந்தை தவழ்ந்து வந்து விளையாட்டை பார்த்துக்கொண்டிருக்கிறது. எனக்கு ஒரு விழிப்பு. தான் விளையாட முடியவில்லையே என்ற நினைப்பு கால் ஊனம், தானும் விளையாட்டில் கலக்க ஆசை, முயற்சி, சபலம், பாசம், இத்யாதிகள் கலக்கப்பட்டு ஒரு விவகாரக் கோர்வையில் ஒரு கதை உருவாகிறது. 'நொண்டிக் குழந்தை' அது.

அந்த கதையை படித்துவிட்டு 'மாயக்கண்ணன் ரூபம் போல் அவன் இருதயம் பலரூபங்களாக பிரிந்து அவனை மகிழச் செய்து கொண்டிருந்தது' என்பது போன்ற வரிகளை கொண்டு அந்த கதை ஒரு குறியீட்டுப் பாங்கான (symbolic) கதை என்று தத்துவ அடிப்படையில் ஆய்ந்து சொன்னார் ஒருவர். அந்த கதையில் கிடைக்கும் ஆதாரத்தைக் கொண்டு அம்மாதிரி சொல்லமுடிகிறது.

இந்த இரண்டு கதைகளையும் நான் எதுக்காக எழுதினேன் ; இந்த இரண்டு நோக்கங்களையும் மனதில் முன்கொண்டா ? நிச்சயமான இல்லை என்று நான் தயங்காமல் சொல்கிறேன். முதல் கதையில் ஏழ்மையால் பூவைக்க முடியவில்லை என்பதுக்கு பதிலாக, வீட்டில் சமீபத்தில் மரணம் ஏற்பட்டு விட்டதால் கோலம் போட்டு பூவைக்கவில்லை என்ற ஒரு காரணத்தை முக்கொண்டு கதையை இன்னொரு செட் சம்பவக் கோவையுடன் வேறு ஒரு சுருதியில் பேச வைத்திருக்கலாம்—கதையின் அடிப்படையான அந்த ஏக்கத்துக்கு குந்தகம் ஏற்படாமல். அதேபோல பிந்தின கதையிலும் ஊனத்துக்கு பதில் தந்தையின் கண்டிப்பாகச் செய்து, அந்த தத்துவதொனி ஏருமல் செய்திருக்கலாம்—கதை உத்தேசத்துக்கு குந்தகம் இல்லாமல்.

ஆகவே நான் கதை எழுதுகிறபோது இந்த குறிப்பிட்ட தத்துவ ரீதியான ஒரு அடிப்படை முதல் நோக்கம் அல்ல எனக்கு. நான் அக்கறை கொண்டிருப்பதெல்லாம். 'human predicament' என்று சொல்லுகிறோமே அந்த 'மனித தொல்லை நிலை' தான்.

இந்த மனித தொல்லை நிலைதான் என் எழுத்துக்கு உயிர் நாடி என்று நினைக்கிறேன். இந்த தொல்லைநிலை ஏற்படுவது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தால் மட்டும் விளைவது அல்ல. வெளித்தெரிய ஒன்றைச் சுட்டிக் காட்டத் தக்கதாக எதாவது இருக்கும். ஆனால் அது ஒன்றேதான் என்று முடிவு கட்ட இடம் இல்லாமல் வேறு வேறு துறைப்பொருள்கள் உள் இழைந்து ஓடக்கூடும்; எனவே தான் கலைஞன் தெளிவிக்கவோ நிச்சயிக்கவோ முடிகிறதில்லை. என் 'வாடிவாசல்' லும் சரி 'ஜீவனாம்சம்' மும் சரி. இந்த தொல்லைநிலை (Predicament) யில் தான் விடுவிப்பு பெறுகின்றன.

இந்த தொல்லைநிலையோடு கூட இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் அதிர்ச்சி என்பது (shock). இந்த அதிர்ச்சி உண்டாதல் தொல்லை நிலையில்தான் ஏற்படுகிறது. 'ஸரஸாவின் பொம்மை' என்ற என் கதையில், ஸரஸாவுக்கு நான் ஒரு ஆம்படையான் பொம்மையாக இருந்திருக்கிறேன் என்ற திடீர் உணர்வு ஏற்படுவது முதல் 'கள்ளத் தொழிலுக்கும் சில தருமங்கள் உண்டுங்க' என்று உணர்த்தப்படுகிற 'கள்ளர்மடம்' கதை வரையில் இந்த அதிர்ச்சி என் கதைகளின் பொதுத்தொனியாக இருந்து வருவதாக நான் உணர்கிறேன். இப்போது மனிதனது இந்த 'தொல்லைநிலை'யையும், அதிர்ச்சி ஏற்படுதல்களையும் வெளியிடத்தான் நான் இதுவரை எழுதி வந்திருக்கிறேன் போலிருக்கிறது, என்று இந்த கேள்வி எழுந்த பிற்கு எனக்கு படுகிற மாதிரி இருக்கிறது.

எதுக்காக எழுதுகிறேன் என்று பிறர் என்னை கேட்பதோ அல்லது நான் என்னையே கேட்டுக்கொள்வதோ நான் எழுதுவதுக்கு முன்போ எழுதுகிறபோதோ எழுந்தது அல்ல. இத்தனையும் எழுதின பிறகு எழுவது. இன்று மொத்தமாக நான் இதுவரை எழுதி இருப்பதைக் கொண்டு பார்த்து எதற்காக எழுதி இருக்கிறேன் என்று நினைவுப்பாதை உத்தியாக பின்னோக்கிப் பார்த்தே, எதுக்காக எழுதுகிறேன் என்று சொல்ல வேண்டிய ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது, ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

எதுக்காக எழுதுகிறேன் என்பதுக்கு இன்னும் பல காரணங்கள் சொல்லப்படக்கூடும். எனக்காக, என் ஆத்ம திருப்திக்காக, என் அனுபவத்தை வெளியிடுவதுக்காக, என் கொள்கைக்காக, மனித வாழ்வு பற்றிய என் பார்வையைக் காட்டுவதுக்காக, என்றெல்லாம் சொல்லக்கூடும். அதேபோல் பிறருக்காக, வாசகர்களிடம் என் கருத்தை தொற்றவைப்பதுக்காக, மனித மனம் பண்பட, மனிதவாழ்வு வளம் பெற, சமுதாயம் மேன்மைப்பட எழுதுகிறேன் என்னும் சொல்லக்கூடும். இதையெல்லாம் பற்றி நான் ஆராயப் போவதில்லை. காரணமாகச் சொல்லப் போவதும் இல்லை. 'இதுக்காக' எழுதுகிறேன் என்றால் 'அதுக்காக' இல்லையா என்று கட்சி வாதம் கிளம்புகிற சூழ்நிலை இப்போது. நான் மேலே குறிப்பிட்டவைகளில் சில நோக்கங்கள் ஒரு எழுத்தாளனுக்கு இயல்பாக அமைந்து இருப்பவை சில அரிச்சுவடி நிலையில் (elementary) உள்ளவை. வேறு சில அரை உண்மைகள். போலி உண்மைகள் என்று சொல்லத் துணியமாட்டேன். அரை உண்மைகள். இவைகளில் ஒன்றை விசேஷமாக கருதி அழுத்திச் சொல்கிறார்கள் சிலர். மற்றொன்றை அழுத்திச்சொல்கிறார்கள் வேறு சிலர்.

ஆகவே, 'எதுக்காக எழுதுகிறாய்' என்று கேட்டால் இந்த விதமாக எல்லாம் யானை பார்த்த குருடர்களாக பதில் சொன்னால் அவை அரை உண்மைகளாகத்தான் இருக்கும். ஏன், மனித ஜாதியின் இந்த 'தொல்லைநிலை predicament யையும் அதிர்ச்சியையும் வெளியிடுவது தான் என் உத்தேசமாக—கொள்கையாக அல்ல—இருந்திருக்கிறது என்று நான் இன்று சொல்வது கூட ஒரு அரை உண்மையாகவே இருக்கலாமோ என்று கூட எனக்குப்படுகிறது இப்போது. ஏனென்றால் மனித வாழ்வின் எல்லா பாகங்களையும் ஒரு படைப்பு மனம்

(112-ஆம் பக்கம் பார்க்க)

வல்லிக்கண்ணன்

இந்தப் புனைபெயரிலும் வேறு பலவற்றிலும் எழுதுகிற ஆசாமி தனக்கென்றொரு தனி வாழ்க்கை வழியையும் சித்தாந்தத்தையும் எடுத்துக்கொண்டு அடக்கமாக இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக தமிழுக்குத் தன்னாலான சேவையை முழுமனத்துடன் செய்து வருபவர். சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், நையாண்டி, முதலிய பல துறைகளிலும் சோதனைகள் நடத்தி வெற்றி கண்டவர் படிப்பதை ஒருகலையாகப் பயின்று அனுபவிப்பவர். பிரம்மசாரி.

நான் தான் வல்லிக்கண்ணன் —

இந்தப் பெயரை கேட்க நேரிடுகிறவர்கள், 'ஓகோ, இவன் ஒரு கொம்பன் தான்!' என்று கருதும்படியாக நான் மகத்தானது எதையும் சாதித்து விடவில்லை என்பதை நான் அறிவேன்.

'ஓ, இவனும் ஒரு எழுத்தாளனா? இவன் உருப்படியாக என்ன எழுதிக் கிழித்திருக்கிறான்?' என்று பெரும் பலர் ஐயவினா எறிந்தால் நான் வியப்புறவும் மாட்டேன்.

ஏனென்றால் —

ஒரு காலம் இருந்தது—பத்திரிகைக்காரர்களும், எழுத்தாளர்களும், நாடக அதிபர்களும், சினிமாக்காரர்களும், 'வல்லிக்கண்ணன் யார்? அவன் எப்படி இருப்பான்? ஏன் அவன் இப்படி எல்லாம் எழுதுகிறான்? அவன் ஏன் ரொம்ப நிறைய எழுதிக்கொண்டிருக்கிறான்? என்று ஐயவினாக்களை தங்களுக்குள் பரிமாறிக் கொண்ட காலம் அது.

தமிழ் எழுத்தாளர் முதலாவது மகாநாட்டில் எழுத்தாளர்கள் தம்மைத் தாமே அறிமுகம் செய்து கொள்ள முன்வந்த போது,

' 'நான்தான் வல்லிக்கண்ணன் நையாண்டி பாரதி, கோரநாதன், சொனா. முனா, சொக்கலிங்கம், சேரம்பேறி, கனவானந்தா, மிவாஸ்கி, தத்துவ ஞானி, வேதாந்தி, ஞானப்பிரகாசம்' என்றும் இன்னும் பல புனை பெயர்களையும் அறிவித்த போது, 'ஒருவனே ஏன் இத்தனை பெயர்கள் வைத்துக் கொண்டு, பலவிதமாக எழுதுகிறான்? இவன் ஏன் இவ்வளவு நிறைய எழுத வேண்டும்?' என்றெல்லாம் அநேகர் கேள்விகள் கேட்டார்கள்.

இப்போது நான் அதிகம் அதிகமாக எழுதாமல் இருக்கின்ற காலத்தில், 'ஏது, இப்போ நீர் எழுதுவதே இல்லை போலிருக்கே?' என்று கேட்கிறார்கள்,

ஆகவே, கேள்வி கேட்கிறவர்கள்—பதிலை எதிர்பாராமலே—எப்பொழுதும் எதையாயது கேட்டுக் கொண்டு தான் இருப்பார்கள் என்று நான் புரிந்து கொண்டேன்.

ஆனால், 'ஏன் எழுதுகிறேன்?' என்பது என்னையே நான் கேட்டுக்கொள்கிற கேள்வி. இதற்கு நான் ஒரு பதிலையும் பெற்றுத்தான் ஆக வேண்டும்.

எனக்கு 40 வயசு பூர்த்தியான போது, 'எனக்காக நானே தேர்ந்து எடுத்துக்கொண்டு அனுஷ்டித்து வருகிற வாழ்க்கை முறை சரிதானா? அல்லது புதிய போக்கு எதையாவது கைக்கொள்ள வேண்டுமா? நான் சென்னையிலேயே இருக்க வேண்டியது அவசியம் தானா? அனைத்தினும் மேலாக, நான் எழுதிக்கொண்டே இருக்க வேண்டியது அவசியமா? என்று கேட்டு என்னையே நான் எண்ணிப் பார்க்கலானேன். அந்த ஆராய்ச்சியில் நான் கண்ட எனது எழுத்து சம்பந்தமான சில உண்மைகளை மட்டும் இங்கு ஒலிபரப்ப முன்வந்திருக்கிறேன்..... ...

எப்படியும் எழுத்தாளன் ஆகவே வாழ்ந்து உயருவது என்று உறுதிபூண்டு' எழுத்துக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து – தங்கள் வாழ்வுமுழுவதையும் மாண்புமிக்க தமிழ்த் தவம் ஆக மாற்றிக் கொண்ட, சில எழுத்துலக முன்னோடிகளைப் போல் தான் நானும் எழுத்து வெறி பற்றி எழுத்தாளன் ஆனேன்.

எழுத்து என்னை வசீகரித்தது. அதனிடம் நான் ஆட்பட்டேன். அதை ஆளும் ஆற்றலும் பெற்றேன். அதுவே எனக்கு மாண்பு மிக்க வெற்றியாகத் தோன்றியது. 'எழுத்து எனக்குச் சோறு போடுமா? வாழ்க்கை வசதிகள் பெற்றுத்தருமா? பகட்டான உலகத்திலே படாடோபமாக வாழ்வதற்கு எழுத்து ஒரு கருவியாகப் பயன்படுமா? என்று நான் யோசிக்கவேயில்லை.

எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற துடிப்போடு தான் நான் எழுதினேன். எழுதிப் பணம் பெற்று, பிழைப்பு நடத்த வேண்டும்—நடத்த முடியும்—என்ற நோக்கத்தோடு நான் எழுதத் தொடங்கியதில்லை; இன்று எழுதவுமில்லை.

எழுதி எழுதி உயர்ந்து விளங்குகிறவர்களைப் போல நானும் எழுத வேண்டும் என்ற ஏக்கம் என்னுள் உந்தும் கனலாக மூச்சுயிர்த்தது. நான் ஓயாது உழைத்தேன். எனக்கு முன் சென்று கொண்டிருந்தவர்களின் கவனிப்பையும், தோழமையையும், அன்பையும் நட்பையும் பரிசாகப் பெற்றேன். அதையே பெரும் பாக்கியமாக நான் மதித்தேன். எழுந்து மூலம் எவ்வளவு சம்பாதிக்க முடிகிறது உன்னால் என்று அன்று என்னிடம் எவரும் கேட்டதில்லை.

ஆனால், ஒரு சில வருஷங்களில் எழுத்து என்பது உயர்ந்த பண்பாக—மாண்பு உடைய தத்துவமாக— எப்பாடு பட்டேனும் அடைவதற்குத் தகுதி உடைய ஒன்றாக—மதிக்கப்படும் நிலைபோய், எழுத்து ஒரு வாணிபப் பொருளாய், பணமும் பெயரும் தேடுவதற்கு வகை செய்யும் ஒரு சாதனமாய். பிழைக்கும் வழிகளில் ஒன்றாய் கருதப்படும் நிலை தமிழ் நாட்டில் தலையெடுத்து வளர்ந்துள்ளது.

ஆகவே. 'வல்லிக்கண்ணன் என்கிற எழுத்தாளனை உமக்குத் தெரியுமா?' என்று யாராவது (தெரியாத்தனமாக) கேட்டுவைத்தால், 'வல்லிக்கண்ணனா? அப்படி ஒருத்தன் எழுதுறானா என்ன? அவன் கதை குமுதத்திலே வந்ததாகவே தெரியலியே? ஆனந்த விகடனிலே எழுதுறானா? கல்கி, கலைமகள்—எதிலுமே வருவது கிடையாதா? அப்போ அவன் என்னய்யா எழுத்தாளன்? அவன்லாம் ஏன் எழுதுகிறான்?' என்று விமர்சிக்கக் கூடிய ரசிகமகாஜனங்கள் பெருத்து விட்டார்கள்.

'நீ என்ன எழுதுகிறாய்? இதுவரை என்ன எழுதியிருக்கிறாய்? எதிர்காலத்தில் என்னதான் எழுத ஆசைப்படுகிறாய்?' என்று என்னிடம் யாரும் கேட்பதில்லை. எழுத்து மூலம் மாசம் உனக்கு எவ்வளவு

வருது ? இத்தனை வருஷமாக எழுதுகிருயே, எவ்வளவு பணம் சேர்த்திருப்பாய் ?' என்று தான் கேட்கிருர்கள். எழுத்து, இலக்கியம், மறுமலர்ச்சி, தமிழை வளம் செய்யும் முயற்சி, புதிய சோதனைகள் என்று சொன்னுல், அவர்களுக்குப் புரிவதுமில்லை; பிடிப்பதுமில்லை. எல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தான் படுகிறது.

ஆகவே, நான் ஏன் எழுதுகிறேன் என்ற கேள்விக்கு உரிய விடையில் முதலாவது பாயின்ட்—

நான் பணம் பண்ணுவதற்காகவோ. பணம் பண்ணும் மனோபாவமுடையவர்களிடம் ஸர்டிபிகேட் வாங்குவதற்காகவோ, 'பிழைக்கத் தெரிந்தவன் என்று' பலராலும் மெச்சப்பட வேண்டும் என்பதற்காகவோ எழுதுவதில்லை.

பத்திரிகைச் சந்தையில் புகுந்து வரும் வாசகமணிகள் என் எழுத்தை எதிர்பார்ப்பதுமில்லை; அவர்களுக்காக நான் எழுதவுமில்லை.

இலக்கியத்தின் தலைஎழுத்தை நிர்ணயிக்க முற்படுகின்ற விமர்சக வித்தகர்கள் என் எழுத்தை எடைபோட்டதாகவும், அதில் உருவமும் இல்லை, உள்ளடக்கமும் இல்லை என்று கண்டதாகவும் சொல்லிவிட்டார்கள். என் எழுத்தில் 'கனம் இல்லை' 'ஸ்பார்க்' இல்லை என்றும் சொன்னுர்கள். அதன் பிறகு என் எழுத்தை அவர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. எனினும் நான் எழுதிக்கொண்டு தான் இருக்கிறேன். ஆகவே. விமர்சக வித்தகர்களுக்காகவும் நான் எழுதவில்லை என்ருகி விட்டது.

எழுத்தரளர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய புதிய விஷயமா என்ன ? எழுத்தாளர்களில் அநேகர், தங்கள் எழுத்துக்களைத் தவிர பிறர் எழுத்தை வாசித்துப் பார்க்கும் வழக்கம் இல்லாதவர்கள். எங்காவது பெயரும் எழுத்தும் பட்டுவிட்டால்—அவர்கள் பார்வையில் சம்பந்தப்பட்ட எழுத்தாளனும் பட்டால்— 'ஓய்' உம்ம எழுத்தை ஏதோ பத்திரிகையில் பார்த்தேனே ஐயா! நீரும் எழுதிக் கொண்டு தான் இருக்கிறீர்னு சொல்லும். பேஷ்!' என்று குறிப்பிடுவார்கள். ஆகவே, நான் எழுத்தாளர்களுக்காகவும் எழுதுவதில்லை.

'உலகம் கெட்டுக் குட்டிச் சுவராகிறது. சமூகம் நாசமாய்ப் போகிறது. அதை உய்விப்பான் வேண்டி அருளுரைகள் வழங்குவோம்' என்ற எண்ணத்தோடு நான் எழுதுகிறேனே என்று பார்த்தாலோ—

அப்படி ஒரு எழுவுமில்லை!

உலகம் உருப்படாது. மனிதவர்க்கம் உருப்படவே உருப்படாது. அதிலும் இந்தத் தமிழ் நாடு இருக்கிறதே அது சுத்த தருத்திரப்பய உலகம். பத்திரிகை, புத்தகப் பிரசுரம், எழுத்து, அரசியல், சினிமா முதலிய கலைகள் சமுதாயம் ஆகிய சகல துறைகளிலும் சின்னத்தனமும் பிற்போக்குப் பண்புகளும் உருப்படாத் தன்மைகளுமே மண்டிக்கிடக்கின்றன. அவற்றை ஒருவனுடைய, அல்லது பலரது, எழுத்தாலா மாற்றிவிடமுடியும்? ஊகுங் !

நான் மனிதகுலம் உய்வதற்காகவோ—'நாட்டு மக்கள் நலமுற்று வாழ' வழிகாட்டுவதற்காகவோ எழுதவில்லை.

கொள்கைக்காக எழுதுகிருயோ என்று கேட்கலாம். என்ன கொள்கை ? எது சரியான கொள்கை ?... நான் எந்தக் கட்சிக்கும் கட்டுப்பட்டவனல்ல. எந்தக் கொள்கைக்கும் அடிமையல்ல. ஆகவே, நான் கொள்கை—கோட்பாடு—பண்பாடு—சாப்பாடு—கூப்பாடு எதற்காகவும் எழுதவில்லை.

'நான் மேதை. நான் குயில் மாதிரி. குயில் இஷ்டப்பட்டால் பாடும். மேகம் இஷ்டப்பட்டால் வர்ஷிக்கும், நானும் அப்படித்தான். எனக்கு மனமிருந்தால் எழுதுவேன். இல்லையெனில் சும்மா இருப்பேன்'. என்று சிலர் சொல்வது உண்டு. அத்தகைய மேதா விலாசத்தோடு நான் எழுதவில்லை.

'கவிதையே கவிதையை எழுதிக்கொள்கிறது. கவிதையின் கைக் கருவி நான். இலக்கியமே இலக்கியத்தை சிருஷ்டித்துக் கொள்கிறது. அதற்கான சாதனம் நான்' என்று சிலர் சொல்வது உண்டு. இந்த வித மனோபாவத்தோடும் நான் எழுதவில்லை.

பின்னே, நான் ஏன்தான் எழுதுகிறேன்?

உயிர் வாழ்கிற ஒவ்வொருவனும், தான் உயிரோடு இருப்பதை உணர்த்துவதற்கு எதையாவது செய்தாக வேண்டும். தான் வாழ்வதை பிறருக்கு உணர்த்தத் துடிக்கிருன் ஒவ்வொருவனும், எனது பிரசன்னத்தை பிறருக்கும், ஊருக்கும், உலகத்துக்கும் உணர்த்த எழுத்து பயன்படும் என நான் துணிந்தேன். எழுதலானேன்.

நான் ஒரு சோம்பேறி. ஆயினும் சும்மா இருக்காமல் ஏதாவது செய்து கொண்டிருப்பதாகப் பெயர் பண்ணுவதற்கு ஒன்று வேண்டுமே. 'மகனே, நானிருக்க பயமேன்?, என்றது எழுத்துத் துறை. ஆகவே, அதைச் சிக்கெனப் பற்றினேன். உய்ந்தேன்.

எழுத்தாளனுகப் பொழுது போக்குவதில் எவ்வளவு சௌகரியம் இருக்கிறது என உணர்ந்து கொண்டாலும் நான் எழுதுகிறேன்.

நாம் உழைக்க வேண்டியதில்லை. சோம்பிக்கிடந்தாலும், ஊர் சுற்றினுலும், தெருவில் போவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலும், எழுத்துத் தொழிலுக்கு அவசியமான காரியத்தையே செய்வதாகச் சொல்லிக் கொள்ளலாம்...... யாரையும் முழித்துப் பார்க்கலாம். எவனுவது முறைத்தால், எனது நாவலுக்காக மெட்டீரியல் கேதர் பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிடலாம்.

வேடிக்கை பார்க்கிற குணம் என்னிடம் நிறைய உண்டு. எழுத்து வேலை அதற்கு ஊக்கம் அளிக்கிறது.

கண்டதை, கேட்டதை, அனுபவங்களை எல்லாம் மற்றவர்களிடம் சொல்ல வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு, ஆனுல் எனது தொண தொணப்பையும் போரடிப்பையும் யார் கேட்டுச் சகித்திருப்பார்கள்? ஆனுல் அவற்றை என் இஷ்டம் போல் காகிதங்களில் பதித்துவைக்க முடியுமே! அதற்காகவும் நான் எழுகிறேன்.

எழுத்தாளனுக்கு ஒரு மாபெரிய உரிமை இருக்கிறது. எவ்வளவு பெரிய கொம்பர் என்ன எழுதியிருந்தாலும் சரி, (அதை படித்து விட்டோ, படித்துப்பார்க்காமலோ), 'இது வெறும் குப்பை. சிந்தனைக் கோளாறு உடையது, சிருஷ்டிக் குறைபாடுகள் கொண்டது' என்றெல்லாம் விளாசி விடலாம். யாரையும் கண்டித்து எழுதலாம். கீதைக் கண்ணனின் அண்ணன் மாதிரி எங்கும் எப்பவும் போதனைகள் வழங்கலாம். வேண்டியவர் வேண்டாதவர் என்ற விருப்பு வெறுப்பற்று அனைவரையும் மட்டம் தட்டலாம். இந்த உரிமையைப் பயன் படுத்தி மகிழ்வதற்காகவும் நான் எழுதுகிறேன்.

எழுத்தாளன் என்ருல் இன்னும் சிலர் மதிப்பு வைத்திருக்கிருர்கள்; மரியாதை காட்டுகிருர்கள். பெரியவன், உயர்ந்தவன் என்று கருதுகிருர்கள். பணிவும் பயமும் காட்டத்தான் செய்கிருர்கள். இவற்றை அனுபவிக்கும் தகுதியை நான் ஏன் இழக்க வேண்டும் என்ற நோக்கத்திளுலும் நான் எழுதுகிறேன்.

அனைத்திலும் முக்கியமான காரணம் இதுதான்— மற்றவர்களை விட நான் உயர்ந்தவன், கற்றவர்களை விட நான் அற்புதங்கள் செய்து கொண்டிருக்கிறேன். இன்று இந்த நாடு நம்மை மதிக்கவில்லையா? தொலையட்டும்! ஒரு காலம் வரும். நாம் செத்துப் போவோம். இந்த நாடு புத்தி பெற்று நம்மை போற்றிப் புகழ்பாடும். அதற்கு முன்னுலேயே, உலகத்தின் சிண்டைப் பிடித்து உலுக்கும்படியான ஒரு மகத்தான காரியத்தைச் செய்து விட்டோமென்ருல், நாம் சாவதற்கு முன்பே இந்த நாடு நம்மை விழுந்து கும்பிடும்.

இப்படி நம்பும் சுதந்திரம் எழுத்தாளனுக்கு இருக்கிறது. இந்த சுதந்திர இன்பத்தை அனுபவித்துக் களிப்பதற்காக நான் எழுதுகிறேன்.

இந்த நம்பிக்கையும் தன்னகங்காரமும் என்னை வாழ்விக்கின்றன.

ஆகவே, நான் வாழ்க! என் எழுத்து வெல்க!

தி. ஜானகிராமன்

சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், விஞ்ஞான சம்பந்தமான சில மொழி பெயர்ப்புகள் இவற்றை திறம்படச் செய்திருக்கிருர். அவருடைய ஆரம்பகாலத்துச் சிறுகதைகள் மிகவும் சிறப்பான யுக்திகளும், ஒரு நளினமான நையாண்டியும் காட்டின அவர் நாவல்களில் மோகமுள் மிகவும் சிறப்பானதோர் சிருஷ்டி பேச்சுத் திறமும், வேகமும், நளினமான சொற்களைக் கொண்டு வலுவானவிஷயங்களைச் சொல்ல முயலுவதும் அவருடைய தனிச் சிறப்புகள். அகில இந்திய ரேடியோவில் கல்வித்துறையில் பணியாற்றுபவர்.

ஏன் எழுதுகிருய் என்று கேட்பது, ஏன் சாப்பிடுகிருய் என்று கேட்பது போல. பசிக்கிறது. சாப்பிடுகிருேம். உயிரோடிருக்க, சாப்பிடுகிருேம். பலம் வேண்டிச் சாப்பிடுகிருேம். ருசியாயிருக்கிறது என்று ஜிஹ்வா சாபல்யத்திளுல் சாப்பிடுகிருேம். சாப்பிடாமல் இருந்தால் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிருர்களே என்று சாப்பிடுகிருேம். சில பேர் சாப்பிடுவதற்காகவே சாப்பிடுகிருர்கள். ருசி, மணத்தைக் கூடப் பாராட்டாமல் சாப்பிடுகிருர்கள். நம் நாட்டு அரசியல் பிரமுகர் ஒருவர் அமெரிக்க தூதராலய விருந்து, உடனே கவர்னர் விருந்து, உடனே ராமநவமி உத்சவச் சாப்பாடு மூன்றையும் ஏழிலிருந்து எட்டு மணிக்குள் சாப்பிடுவார்.

இத்தனை காரணங்கள் எழுத்துக்கும் உண்டு— அதாவது நான் எழுதுகிறதற்கு. பணத்துக்காக, பேருக்காக, பேரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, நானும் இருக்கிறேன் என்று காண்பித்துக் கொள்வதற்காக, தாக்ஷிண்யத்திற்காக, எனக்கே எனக்காக, கொஞ்சம் எனக்கும் கொஞ்சம் உங்களுக்குமாக, சில சமயம் எதற்கு, யாருக்கு என்று தெரியாமல்—இப்படி பல மாதிரியாக எழுதுகிறேன். சில சமயம் நாடகத் தயாரிப்பாளர் சொல்லுகிருர்—ஒரு பிரமிப்பு, ஒரு தினுசான தாக்குதல் ஏற்படுத்த வேண்டும் பார்க்கிறவர்கள் மனதில் என்று—சரி என்று சொல்லுகிறேன். கடைசியில் பார்க்கும் பொழுது, இத்தனை காரணங்களும் அல்லாடி அலைந்து மூன்று குழிகளில் பிரிந்து விழுந்து விடுகின்றன. எனக்கே எனக்கு, உனக்கே உனக்கு, எனக்கும் உனக்கும்—இந்த மூன்று தினுசுதான் கடைசியாக உண்டு என்று தோன்றுகிறது. இந்த மூன்றும் சேர்ந்து ஒரே இடத்தில் ஒரே எழுத்தில் இருக்கிருற்போல சிலசமயம் ஒரு பிரமை ஏற்படலாம். அது பிரமைதான். உண்மையில்லை. இரவு எட்டு மணிக்கு காய்கறி வாங்கும்பொழுது, நேற்று மாலையில் வந்தது, இன்று காலையில் வந்து இன்று முழுவதும் வெயிலில் காய்ந்தது, இன்று மாலை வந்தது மூன்றும் ஒரே குவியலாகக் கிடக்கும். ஆனுல் சற்று உற்றுப் பார்த்து, தொடாமல்கூட, கலந்துகட்டி என்று கண்டு பிடித்து விடலாம்.

எனக்கே எனக்கு என்று சொல்லுகிற எழுத்தைப் பற்றித்தான் இங்கு சொல்லவேண்டும். அதுதான் மரியாதை. அதுதான் உயர்வு. அதுதான் கௌரவம்.

எனக்கே எனக்காக எழுதுவதைப்பற்றி என்ன சொல்லமுடியும்? விஸ்தாரமாகச் சொல்ல என்ன இருக்கிறது? எனக்கே எனக்காக எழுதவேண்டும் போலிருக்கிறது. எழுதுகிறேன். அது என்னமோ பெரிய ஆனந்தமாக இருக்கிறது. காதல் செய்கிற இன்பம் அதில் இருக்கிறது. காதல் செய்கிற இன்பம், ஏக்கம், எதிர்பார்ப்பு, ஒன்றிப்போதல், வேதனை— எல்லாம் அதில் இருக்கின்றன. இன்னும் உள்ளபடி சொல்லவேண்டும் என்ருல் பிறர் மனைவியைக் காதலிக்கிற இன்பம், ஏக்கம், நிறைவு—எல்லாம் அதில் இருக்கின்றன. கண்யநஷ்டம், பாபம் பாபம் என்று மூலையில் முடங்கியவாறே கையாலாகாமல் முணுமுணுக்கிற மனச்சாட்சி, சந்தி சிரிப்பு, சந்தேகக்கண்கள்,—இத்தனையையும் பொருட்படுத்தாமல் முன்னேறுகிற பிடிவாதம், வெறி, அதாவது ஆனந்தம்—எல்லாம் அதில் இருக்கின்றன. உங்களுக்காக எழுதும் பொழுதோ, உங்களுக்கும், எனக்கும் எழுதும்பொழுதோ மனைவியைக் காதலிக்கிற நல்ல பிள்ளைத்தனமும் நிர்ப்பந்தமும்தான் கண்ணுக்குத் தெரிகின்றன. பல சமயங்களில் நல்ல பிள்ளையாகத் தான் காலம் தள்ளவேண்டியிருக்கிறது. மனித வாழ்க்கையின் நெருக்கடிகளும் பிடுங்கல்களும் அப்படிச் செய்து விடுகின்றன. இந்த நிர்ப்பந்தத்துக்குப் பணியாதவர்களைக் கண்டும் நிர்ப்பந்தங்கள் இல்லாதவர்களைக் கண்டும் பொருமைப் படுகிறேன்.

சரி. எனக்கே எனக்காக எழுதும்பொழுது என்ன எழுதுகிறேன்? எப்படி எழுதுகிறேன்? என்ன எழுத வேண்டும் என்று எனக்கு நானே உபதேசம் செய்து கொள்கிறேனு? பசியே தொழிலாகக் கொண்டிருக்கிற ஏழைகளைப் பற்றி, பிச்சைக்காரர்களைப் பற்றி, பாட்டாளிகளைப் பற்றி, விருப்பமில்லாமல் வழுக்கி விழுந்த பெண்களைப் பற்றி, பள்ளிக்கூடம் போகமுடியாமல், பிண ஊர்வலத்தில் நடனம் ஆடிக் கொண்டு போகிற குழந்தைகளைப் பற்றி, விருப்பமில்லாமல் திருட நேர்ந்தவர்களைப் பற்றித்தான் எழுதவேண்டும் என்று வகுத்துக் கொள்கிறேனு? இதையெல்லாம் எழுதி

உன்னைச் சுற்றி சாக்கடை தேங்கிக் கிடக்கிறது, ஏன் பார்க்கவில்லை என்று சமுதாயத்தைப் பார்த்துக் கோபித்துக் கொள்ள சங்கற்பிக்கிறேனா? அல்லது குடும்ப உறவுகள், உணர்ச்சிகள், கலைஞர்கள், பெரிய உத்யோகஸ்தர்கள், நடு வகுப்பு, உயர் வகுப்பு மனிதர்கள், அவர்களுடைய ஆசாரங்கள், சீலங்கள், புருவந் தூக்கும் பாங்கு, சண்ய வரம்புகள், மேல் பூச்சுகள், உள் நச்சுகள் இவற்றைப் பற்றி எழுதவேண்டும் என்று திட்டம் போட்டுக் கொள்கிறேனா? அல்லது சிம்ம விஷ்ணு, கரிகாலன், ராணா பிரதாப், வல்லப சேனன், அலெக்சாண்டர் – இவர்களைப் பற்றி எழுதி பழைய காலத்தை மீண்டும் படைக்க வேண்டும், இன்றைய மனிதனின் மூதாதையரின் நற்குண துர்குணங்கள், இவற்றை எல்லாம் எழுதி சரித்திரக் கொள்கைகளையோ சித்தாந்தங்களையோ வகுத்து நிலை நாட்டவேண்டும் என்று எழுதும்பொழுது திட்டம் போட்டுக் கொள்கிறேனா? எனக்கே எனக்காக எழுதும்போது இந்தப் பிடுங்கல்கள் ஏதும் என்னைத் தொந்தரவு செய்வதில்லை. நான் இத்தனை பேரைப்பற்றியும் எழுதினாலும் எழுதுவேன். எழுதாமலும் இருப்பேன். யாரைத் தெரியுமோ அவர்களைப் பற்றி எழுதுவேன்...அதாவது அவர்கள், அல்லது அதுகள் என் மனதில் புகுந்து, தங்கி, அமர்ந்து என்னைத் தொந்தரவு பண்ணினால் எழுதுவேன். தொந்தரவு தாங்கமுடியாமல் போனால் தான் எழுதுவேன். நானாகத் தேடிக் கொண்டுபோய் "உன்னைப் பற்றி எழுதுவதாக உத்தேசம் என்று பேட்டிக் காணமாட்டேன்–அப்ஸர்வ் பண்ணமாட்டேன். அவர்களாக, அதுகளாக வந்து என்னைத் தாக்கினால் தான் உண்டு. அதனால்தான் எனக்கு எழுதுவதற்காக யாத்திரை பயணங்கள் செய்வதில் உற்சாகம் கிடையாது. அதைவிட காதல் செய்து பொழுதைப் போக்கலாம். (என்ன காதல் என்று நிர்ணயித்துக் கொள்வது என்னுடைய இஷ்டம், வசதியைப் பொறுத்தது.)

அப்படியென்றால் நீர் எழுதுவதற்காகப் பயணம் செய்வதில்லையா என்று யாராவது கேட்டால்? ம்... செய்கிறதுண்டு. அது உங்களுக்காக, உங்களுக்கும் எனக்குமாக எழுதும் பொழுதுதான். அதனால் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம், ஏமாளிகளைப் பிரமிக்க அடிக்கலாம் என்று தோன்றினால் செய்வதுண்டு. நடு நடுவே அல்ப சந்தோஷங்கள் படுவதில் தப்பொன்றுமில்லை.

ஆக, எனக்குத் தெரிந்தவர்களையும், தெரிந்ததுகளையும் பற்றி எழுதுகிறேன். நான் பார்த்தவர்களையும் பார்த்ததுகளையும் பற்றி எழுதுகிறேன் ... அல்லது என் கண்ணிலும் மனதிலும் பட்டவர்களையும் பட்டவைகளைப் பற்றியும் எழுதுகிறேன். சில சமயம் என்ன அம்மாமி பாஷையாக இருக்கிறதே என்று சிலர் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய? அம்மாமிகளைத்தான் எனக்கு அதிகமாகத் தெரியும். ஆத்தாள்களைப் பற்றி ஏதோ சிறிதளவுதான் தெரியும். தெரிந்த விகிதத்துக்குத்தான் எழுத்தும் வரும்.

எதற்கு எழுதுகிறாய் என்று கேட்டதற்கு, என்ன எழுதுகிறேன் என்று சொல்வதா பதில் என்று யாராவது கேட்கலாம். எனக்காக என்று சொல்லும் பொழுது, என்ன, எப்படி இரண்டும் சொல்லத் தான் வேண்டும் என்று முன்னாலேயே சொல்லிவிட்டேன். மறுபடியும் சந்தேகம் வரப் போகிறதே என்பதற்காக ஞாபகமூட்டினேன்.

எப்படி என்ற கேள்விக்குப் பதில் சொல்வதுகூட அவ்வளவு கடினமில்லை. ஏனெனில் எனக்காக எழுதுவது சொல்பம்தான். எழுதுகிறது என்னமோ அதிகம் தான். கூலிக்கு மாரடிப்பதும், கோவில் மேளம் வாசிப்பதும் நிறைய உண்டு. ஆனால் அது என்றும் சொந்தத்திற்கு என்று எழுதுகிற எழுத்தைப் பாதிப்பதில்லை என்று நிச்சயமான உணர்வு இருக்கிறது. கூலிக்கு மாரடித்ததால், மார்வலியோ, சோர்வோ இருந்தால், வலியடங்கி சோர்வகன்ற பிறகு அதுவும் அவசியமானால், முடிந்தால் எழுதுகிறதே தவிர, வலியோடும் சோர்வோடும் எழுதுகிறது கிடையாது. எவனாவது எழுதுவானா அந்த மாதிரி! எழுதத் தான் முடியுமா? திராணி எங்கே இருக்கும்?

எப்படி எழுதுகிறேன் என்று சொல்வதைவிட எப்படி எழுத ஆரம்பிக்கும் நிலைக்கு வருகிறேன் என்று சொல்வதுதான் இன்னும் பொருந்தும். புகையிலையை மென்று கொண்டு சும்மா உட்கார்ந்து மனம் சுற்றிச் சுற்றி ஒன்றை முற்றுகையிடுகிற, வழி காணமல் தவிக்கிற, வழி காணப் பறக்கிற ஆட்டங்களைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறேன். சாப்பிடும்பொழுது வேறு வேலை செய்யும் பொழுது, வேறு ஏதோ எழுதும் பொழுது, யாருடனோ பேசும் பொழுது இந்த அமர்க்களமும், தவிப்பும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. நடப்பது தெரிகிறது. வழி தெரிந்ததும் எழுத முடிகிறது. அவ்வளவுக்குமேல் அதைப்பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை.

கலைவடிவத்துக்கும் எனக்காக எழுதுவதற்கும் என்ன சம்பந்தம்? எனக்காக எழுதுவது எல்லாம் கடைசல் பிடித்த கலைவடிவம் கொண்டிருக்கவேண்டுமா? அவசியம் இல்லை. கலைவடிவம் என்பது தவத்தையும், அதன் தீவிரத்தையும் பொறுத்தது. அந்த முனைப்பு சிறு நொடியிலோ, பல வருடங்களிலோ சாத்தியமாகலாம். காலம் முக்கியம் என்றாலும் அவ்வளவு முக்கியமில்லை. உணர்வின் அனுபூதியின், அமுங்கி முழுகுவதின் தீவிரத் தன்மைதான் முக்கியமானது. இது எனக்காக எழுதும் எழுத்திலும் சாத்தியம். உங்களுக்காக எழுதும் எழுத்திலும் சாத்தியம். எனக்காக எழுதும் எழுத்தில் கலைவடிவம் சிலசமயம் மூளியாகவோ, முழுமை பெருமலோ, நகாசு பெருமலோ இருக்கலாம். ஆனால் அதுதான் அதன் வடிவம். அதாவது மூளியும் முழுமையில்லாததும் அதனுடைய ஒரு அம்சம்.

கூலிக்காக நான் எழுதும் எழுத்திலும் அல்லது உங்கள் சந்தோஷத்துக்காக நான் எழுதும் எழுத்திலும் கலை வடிவம் என்ற ஒன்றைக் கொண்டு வந்துவிட முடியும். இங்கு கலைவடிவம் என்பது பயிற்சியின், சாதகத்தின் ஒரு விளைவாகப் பரிணமித்து விடுகிறது. இந்த இடத்தில் தான் ஒரு முக்கியமான வேற்றுமை தோன்றுகிறது. கலைக்கும் நுண் தொழிலுக்கும் உள்ள வேற்றுமை அது. சில சமயம் நான் செய்கிற நுண் தொழிலைக் கண்டு கலைவடிவம் என்று தப்பாகப் புரிந்து கொண்டு விடுபவர்கள் உண்டு, அப்படிச் சொல்லி என்னையே ஏமாற்றப் பார்ப்பார்கள்.

ஆனால் எனக்குத் தெரியும் எது கொம்பில் பழுத்தது எதை நான் தடியால் அடித்து குடாப்பில் ஊதிப் பழுக்க வைத்திருக்கிறேன் என்று. எனக்காக நான் எழுதும் போது, கொம்பில் பழுத்த பழம். நான் பண்ணிய தவத்தின் முனைப்பில் பழுத்த பழம் அது. என் தவம் எத்தனைக் கெத்தனை தீவிரமாக ஒன்றிப்பிலும் தன் மறப்

யிலும் கனிந்து எரிகிறதோ. அப்போது வடிவம் தானாக அமைந்துவிடும். அது சில சமயம் மூளியாகவோ குறையுள்ளதாகவோ இருக்கலாம். ஆனால் பூப்புநிலையில் பூவில் இட்ட முட்டை வண்டாக வளர்கிறமாதிரி, அதை நான் தடுத்திருக்க முடியாது. அந்த ஒரு கறுப்பு, கசப்பு எல்லாம் அதன் அம்சம், தவிர்க்க முடியாத நிலையில் எழுதப்பட்ட விதி. இந்தக் கனிவில்தான், இந்த தவத்தில்தான் என் சுயரூபம் எனக்குத் தெரிகிறது. என்னுடைய உள் பிரபஞ்சத்தில் உள்ளதெல்லாம் மேலே மேலே இருள் நீங்கி என் சிந்தைக்கும் உணர்விற்கும் புலனாகிறது. என் தவம் மிகமிக, மேலும் மேலும் என் சுயரூபம் எனக்குத் தெரியும். அதற்கு வளர்ச்சி என்றோ மாறுதல் என்றோ பெயர்களிட நான் விரும்பவில்லை.

இந்தக் கலைவடிவம்தான் வடிவம். இதை ஒரு மரச்சட்டமாகச் செய்து இறுகச் செய்து விடுகிறார்கள் இலக்கியச் சட்டம் சேர்க்கிற தச்சர்கள். அதை வைத்துக் கொண்டு பிறகு வரும் கலைவடிவங்களையும் பிறருடையவற்றையும் அதிலே பொருத்தப் பார்க்கிறார்கள். தானே வடிந்த வடிவத்தை, சட்டத்தில், திருவாசியில் அடைக்க முடியாது. இப்படி அடைத்து, சமஸ்கிருத நாடகத்தை வளரவிடாமல் அடித்த ஒரேபெருமை தச்சர்களுக்கு உண்டு. சமஸ்கிருத நாடகம் சூம்பிப்போனதற்கு, பல காரணங்களில் இதுவும் ஒன்று.

அதற்காகத்தான் மீண்டும் சொல்கிறேன். கலைவடிவம் என்னுடையது. என் தவத்தின் பெருமையைப் பொருத்தது. மூளியும் அதன் பெருமை. சட்டம் போட்டு என்னை பயமுறுத்தாதீர்கள் என்று. நான் உங்களுக்காக எழுதுகிறதைப் பற்றி நீங்கள் அந்த தீர்ப்பெல்லாம் சொல்லலாம். நான் கவலைப்படவில்லை. வாலைப் போட்டு விட்டு பல்லியைப்போல் தப்பி விடுவேன்.

ஜெயகாந்தன்

சமீபத்தில் சிறுகதை ஆசிரியராகத் தனக்கென்று ஒரு தனி ஸ்தானத்தை வகுத்துக் கொண்டவர் ஜெயகாந்தன். முற்போக்குக் கொள்கைகளை ஆதரிப்பவர். ஆனால் அவர் எழுத்திலே மூன்றில் இரண்டுபங்கு முற்போக்குக் கொள்கைக்கு ஒத்துவராது. துடியான நடையும், ஒரு தனிப்பட்ட சுதந்திர உரிமைப் போக்கும் அவரது சிறப்புகள். ஒரு நாவலும் பல சிறுகதைகளும் சில நீண்ட கதைகளும் கவிதையும், சினிமா பாட்டுகளும் எழுதியிருக்கிறார்.

எழுதுகின்ற நம்மிடையே இப்படி ஒரு கேள்வி பிறந்திருப்பதும் இதற்குப் பதில் சொல்வது அவசியம் என்று நாம் உணர்ந்து இங்குக் கூடியிருப்பதும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். 'எதற்காக எழுதுகிறேன் ?' என்ற கேள்வியிலேயே ஓரளவு—பொதுவான—பதில் ஒன்று அடங்கியிருக்கிறது. எதற்காகவோ தான் நாம் எழுத வேண்டும் என்பதைத் தாங்கி நிற்கும் இக்கேள்வி பொதுவான பதிலுடன், ஒவ்வொரு எழுத்தாளனிடமும் குறிப்பான ஒரு பதிலை எதிர்பார்த்து நிற்கிறது..

'ஒருவனைப் பார்த்து உன் பெயர் என்ன?' என்று கேட்டால், அவனுக்கு ஒரு பேரிருக்கிறது என்று நம்பியே அவ்விதம் கேட்கப்படுகிறது என்று கொள்வோம். பதில்—ராமன் என்றோ, கிருஷ்ணன் என்றோ கூறுவதாகத் தான் இருக்க வேண்டுமேயல்லாது 'வேறொன்றுமில்லை' என்பதாக இருக்க முடியாது. அதற்குக் கேள்வி, 'உனக்குப் பேர் உண்டா?' என்பதுதானே ?

'எதற்காகவேனும் எழுதுகிறேனா ?' என்றொரு தலைப்பின் கீழ் நம்மைப் பேச அழைத்திருந்தால் 'ஆம்' 'இல்லை' என்று ஒரு வார்த்தையில் பதில் சொல்லி முடிப்பது அழகாக இருந்திருக்கும்.

எதற்காகவோ தான் எழுதுகிறேன் என்பவருக்காவது பேச நியாயம் உண்டு. எதற்குமில்லை என்பவர் ஏன்தான் பேசவேண்டும்? ஆகையினால் இங்கு இந்தத் தலைப்பின்கீழ் பேச வந்திருக்கும் நண்பர்கள் அனைவரும், எழுத்து என்பது எதற்காகவோ தான் பிறக்கிறது. எதற்காகவோ, அது பயன்படுகிறது, பயன்பட வேண்டும் என்கிற கொள்கையுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று எண்ணி மகிழ்வுறுகிறேன். அது தவறாகாது.

சரி, 'நான் எதற்காக எழுதுகிறேன்'. எல்லாவற்றுக்குமே ஒரு காரணமும், ஒரு காரியமும் உண்டு. எது என்னை எழுதவைத்தது, எதற்காக நான் எழுதுகிறேன் என்பதும் என் எழுத்தின் இருபுடையும் சம்பந்தமுடையன வாகும்.

நான் எழுதுவதே, ஏதோ தன்னியல்பாக—தெய்வ வரம்போல், அல்லது தெய்வ சாபம்போல் என் ஆளுகைக்கு அப்பாலான ஏதோ ஒரு நிகழ்ச்சிபோல் நிகழ்வதா?...

குறியும் நெறியுமில்லாமல், என்னிடம் உள்ள அதீத, அபூர்வ மனுஷத்வத்தில் கிளைப்பதா?

மலர் எதற்காக பூக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா?' என்றெல்லாம் அழகாக எனது நண்பரொருவர் என்னிடம் கேட்டாரே அது போலத் தானா?...அதெல்லாம் வெறும் ஹம்பக்!

நான் ஏன் இப்படி எரிச்சலுடன் சொல்லுகிறேன் என்றால், இவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் வேஷங்கட்டி ஆடுகிறார்கள். அதனாலேயே இவர்களைப் பார்க்க எனக்கு அருவருப்பாயும் ஆத்திரமாயும் இருக்கிறது. எல்லா மனிதனைப் போலும், எல்லா விதமான அழுக்குகளையும் தன்னுள் ரகஸ்யமாகச் சுமக்கிறான் இவன். தன் முயற்சியால் மிகவும் சிரமப்பட்டு விஷயங்களை அறிகிறான்; எந்த நேரத்தில் இதன் உருவம் திரிந்துவிடுமோ, உள்ளடக்கம் நைந்துவிடுமோ என்று கவனத்தோடு வரிவரியாய் மிகுந்த மனிதப் பிரயாசையுடன் எழுதுகிறான். பத்திரிகைக்காரன் எப்படியாவது இதைப் பிரசுரிக்க வேண்டும் என்று அசிங்கமாகக்கூட 'ஆசை'ப்படுகிறான்; அதன் மூலம் பணம் சம்பாதிக்க அலைகிறான். எங்கோ வேலை செய்து வாங்கும் சம்பளம் வயிற்றுச் சோற்றுக்குச் சரியாகிவிடுகிறது. மாதாமாதம் ஒரு துண்டு—பட்ஜெட் விழுகிறது, அதையும் மனசில் கொண்டு இவன் பேனா பிடிக்க ஆரம்பிக்கிறான். 'எப்படி ஸார் இருந்தது கதை படிச்சீங்களா?' என்று பாராட்டைப் பிச்சைக் கேட்கிறான். கடைசியில் 'எதற்காக நீ எழுதுகிறாய்? உன் எழுத்துக்கு ஒரு லட்சியம் உண்டா?' என்று, அவன் எழுத்தில் அங்கங்கே காணப்படும் சில கருத்துக்களினால் ஆகர்ஷிக்கப்பட்டவன் கேட்டால்— அவ்விதம் கேட்கும்போது இவன் மனசில்தான் எது

எதற்காக எழுதினேம் என்ற காரணங்கள் எழுகின்றன. அந்தக் காரணங்களிலேயே அமிழ்ந்துகிடக்கும் நியாயங்களும், சமூகப் பிரச்னேயும் இவனது தத்துவ தரிசனத்தில் அல்பமாகவும் இழிவாகவும் படுகின்றன. இப்படிப் பட்டசம்பிரமங்களுடன் எழுதும் தன்னேப்போய்'ஏதாவது லட்சியம்' உண்டா என்று ஒருவன் கேட்டுவிட்டானே... என்று அவன் மனம் தாழ்வுணர்ச்சியால் ஒரு விநாடி செத்துப் புரள்கிறது. அதை அந்த வாசகன் தெரிந்து கொள்ளக் கூடாதே! உடனே அவனேப் பார்த்து 'ஓ' வென்று சிரிக்கிருன். தனது தாழ்வுணர்ச்சியிலிருந்து தப்பித்துக் கொள்ள அந்த வாசகனேத் தாழ்வு படுத்துகிருன்! 'அடா முட்டாளே...யாரைப் பார்த்து இவ்விதம் கேட்டாய்? கலேக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லே. சீசீ, கேவலம் அரசியல்வாதியிடம் கேட்கவேண்டிய கேள்வியையா என்னிடம் கேட்கிருய்?...மலர் ஏனப்பா பூக்கிறது? அது போல்தான் கலேஞனின் சிருஷ்டியும். லட்சியம் கொள்கை என்பது எல்லாம் பிரசாரம்...நான் கலேஞன்' என்று கூறித் தப்பித்துக் கொள்கிருன்.

நான் எழுதுவதற்கு ஒரு URGE–ம் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு லட்சியமும் உண்டு. நான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளேவும் எனது தனிமுயற்சியின் பலனுமாகும்.

இந்த Philistine களேப் பற்றிப் பேசும்போது, அழகியல் உணர்வே இல்லாத நம் அரசியல் தோழர் கலேயென்ற பேரில் குதியாட்டம் போடுவதும் எனக்கு உடன்பாடில்லே.

அர்த்தமில்லாமல் கலே இருக்க முடியாது. அதே போழ்தில் அழகியல் இன்றி மட்டும் கலே உருவாகிவிட முடியுமா? வாழ்க்கைக்கும், உலகுக்கும், இந்தப் பிரபஞ்சத்துக்கும் அர்த்தம் கற்பிப்பவன் மனிதன். இயற்கைக்கே அர்த்தம் கற்பிக்கின்ற மனிதன், தன்னுல் இயற்றப்படுவதற்கு அர்த்தமில்லே யென்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லே. அதனுலேயே லட்சியமில்லாத கலே இருக்கமுடியாது என்பது தெளிவாகிறது. ஒரு லட்சியம் இருப்பதனுல் மட்டுமே ஒன்று கலேயாகிவிட முடியாது என்பதைக் கலேஞர்கள் அழுத்திக் கூற வேண்டியதும் அவசியமாகின்றது.

மலர் இப்படித்தான் பூக்கும் என்பதனுல் அதற்கு இலக்கணமும் வேண்டாம் விமர்சனமும் தேவை இல்லே என்று சொல்லி அழகியல் உணர்வே இல்லாமல் ஒருவர் தனது கொள்கைப் பிரச்சாரத்தையே இலக்கியம் என்று எழுதித் தப்பித்துக் கொள்ள முடியுமல்லவா?...

இந்த இருவருமே தத்தமதுபலவீனம்கருதியே ஒருவரை ஒருவர் மறுத்துக் கொள்கின்றனர் என்பது எனக்குப் புரிகிறது. இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் முரணல்ல, கலேவிவகாரத்தில் இருவருமே சம்பந்தப்பட்டவர்கள். இவர்களின் அக்கறையான 'கலேயின் உருவம் கலேயின் ஆத்மா' ஆகிய இரண்டும் தனித்தனியே விலகிக்கிடப்பது சரியன்று என்பதை உண்மைக் கலேஞர்கள் உணர முடியும்.

தனிமனிதக் கலேஞர் ஒருவர் என்ன சொல்கிருர்? இதெல்லாம் என்னய்யா வீண் விவகாரம்! எனக்குப் புகழ் வேண்டும். பணம் வேண்டும், எனது வாசகனே நான் திருப்திப் படுத்துவதன் மூலம் எனக்கு இரண்டும் கிடைக்கிறது. இதற்காகத்தான் நான் எழுதுகிறேன் என்று.

ரொம்ப சரி, நானும் அப்படித்தான். நான் பணத்துக்காகவும் எழுதியிருக்கிறேன். நான் எழுதுவதன் மூலம் பணம். சம்பாதித்தும் இருக்கிறேன். ஆனுல் இங்கு ஒரு உண்மையை உரத்த குரலிலோ, அல்லது மெதுவாகவோ சொல்லித்தான் ஆகவேண்டும்—நான் எழுதுவதே பணத்துக்காக அல்ல!...

அப்படியென்ருல், வேறு எதற்காக? புகழுக்காவா?...

ஆம்! புகழுக்காகத்தான்...நிரந்தரமான புகழுக்காக!...

நிரந்தரமான புகழ் எதனுல் கிடைக்கும்? வெறும் கழைக் கூத்தாடித்தனத்தால் கிடைக்குமா? கூடியிருக்கும் ஜனங்கள் அந்த நிமிஷம் கை தட்டுவது ஒரு புகழாகுமா?

மனித குலத்தைப்பற்றி, சமூக வாழ்வைப் பற்றிப் பொறுப்போடு சிந்தித்தவர்கள், சேவை செய்தவர்கள், உயிரையும் தந்தவர்கள் — இவர்களே நிரந்தரப் புகழடைந்தார்கள். சிந்தனேயும், சேவையும், தியாகமும் கலேஞர்களுக்கு வேண்டாம் என்பவர்கள் மனித குலத்தின் விரோதிகள். கலேயைக் கொச்சைப் படுத்துகிறவர்கள். கோழைகள்...இவர்கள், வாழ்க்கையால் தமக்கு நிர்ப்பந்திக்கப்படும் பொறுப்பையெல்லாம் உதறிவிடவே கலேப் போர்வைக்குள் ஒளிந்து கொள்கிருர்கள். இவர்களின் சாதுரியத்தால் இவர்கள் தான் பிழைப்பார்கள். கலே வளராது.

சரி. தெளிவாக, நான் எதற்கு எழுதுகிறேன் என்று சொல்லவேண்டும் அல்லவா?

இந்த நாட்டில், வியாசன் முதல் பாரதிவரை எதற்காக எழுதினுர்கள்? இவர்களில் யாராவது கலேயைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக் கொண்டதுண்டா? இவர்களேவிட கலேயைத் தாங்கியவர்களும், காலம் காலமாய் வாழும் வாழப்போகும் காலா சிருஷ்டிகளேத் தந்தவர்கள்தான் உண்டா?

தர்மார்த்தங்களே உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினுர்.

பாரதி எதற்காகப் பாடினுர்? என்ற கேள்வியை நாம் எழுப்பிக் கொள்வது வெறுமே விவாதம் செய்ய நமக்கு இருக்கும் ஆசையைத்தான் காட்டும். தமிழிலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும் போது

'நூலினியல்பே நுவலின் ஓரிரு
பாயிரந்தோற்றி மும்மை யினென்ருய்
நாற்பொருட் பயத்தோடு...எழுமதந்தழுவி'

என்று நூலின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர்தான் 'எழுமதம்' பத்துக்குற்றம், பத்தழகு, முப்பத்திரண்டு உத்தி முதலிய இலக்கண விளக்கங்களேக் கூறிச் செல்கிறது.

அறம்—'தர்மம்' எது என்பதில் நாம் மாறுபடலாம். அதை விவாதிக்கலாம்...

இந்த உலகில், தர்மம் அழிக்கப்படுகிறது என்றும், ரோஜாவும், மல்லிகையும் எருக்கம் பூக்களாக மதிக்கப் படுகின்றன; எருக்கம்பூவும் குப்பைமேனியும் ரோஜா வென்றும் மல்லிகை என்றும் கொண்டாடப் படுவது கண்டு நான் மனம் வெதும்பி இருக்கின்றேன்.

அதனுல் எனது ரோஜாக்கள், நண்பர் சிதம்பர சுப்ரமண்யம் போன்றவர்களுக்கு எருக்க மலர்களாய்ப் படுகின்றன.

இவை எருக்கம் பூக்கள் அல்ல; இவைகள்தான் ரோஜாவும், மல்லிகையும் கடவுளர்க்கும் பிடித்த பாரி ஜாத மலர்களுமாகும் என்று காட்டுவதற்காக, தாங்கள் எருக்கம் பூக்கள்தான் என்று எண்ணி குப்பையில் ஒதுங்கிக் கிடக்கும் அந்த மலர்களுக்கே அவற்றை உணர்த்துவதற்காக நான் எழுதுகிறேன்.

வாழ்க்கை, போராட்டம் என்பதை வெறும் வாசக மாக, ஒரு சொற்றொடராகக் கொள்ளாமல் அதன் பூரண மான அர்த்தத்தோடு நான் பார்க்கிறேன். நாம் அனை வரும் போராடிக் கொண்டிருக்கிறோம்....

எழுத்தாளன் சோம்பேறியோ, பொறுப்புக்களற்ற வனோ அல்ல. அவன் உலகத்து இன்பங்களை, அல்லது குறைந்த பட்ச வசதிகளை அநுபவித்துக் கொண்டு தனக்குத்தானே. தன்மன அரிப்புக்காக வாழும் 'மன மைதுனக்கா'ரனல்ல.

அரசியல்வாதியும், விஞ்ஞானியும், கலைஞனும் இந்த உலகத்தை நிர்ணயிக்கிறார்கள். இதன் தன்மையை மாற்றியமைத்து வளர்க்கிறார்கள்.

அவர்களது இந்தப் போராட்டத்தில் நான் எனது கடமையைச் செய்கிறேன். இதை மறுத்தால் நான் வாழும் காலத்திற்கும், எனது உடன் பிறந்தோர்க்கும் நான் துரோகம் செய்தவனாவேன்.

கலைத்தன்மைக்கு எத்த வித குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத்தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான் நான் எழுது கிறேன். மகனும் மருகியும் சேர்ந்து செய்யும் சேவை தாயின் மனத்தை கூடுதலாகக் குளிர்விக்கும்.

இதனால் அழகியல் கெட்டுப் போய்விடும் என்று யாரும் நினைப்பது சரியாகாது.

மரப்பாச்சிதான் வெறும் அழகியலுக்கு உதாரணம். அதைவிடக் குழந்தையின் ரசனைக்குரியது எது? மனிதனின் பேதைப் பருவ அழகியல் உணர்வு அவ்வளவுதான்.

ஆனால் நடராஜ விக்ரகம் வெறும் அழகியல் உணர் வின் அடிப்படையில் வந்தது மட்டுமல்ல. அதற்கு ஒரு அர்த்தம்-வலுவான அர்த்தமும் உள்ளடங்கி இருக்கிறது. இன்னும் தெளிவாய்ச் சொன்னால் அந்த அர்த்தமே அந்த அற்புத வடிவத்தை உருவாக்கி இருக்கிறது!

வடிவத்தில் என்ன குறைவு வந்துவிட்டது, அது பிரதிநிதித்வப்படுத்தும் அர்த்தத்தால்?

அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது அல்லவா? வெறும் வடிவம் மரப்பாச்சிதான். ஆகையினால் இவற் றைப் பிரித்துக்கொண்டு வீண் அவஸ்தைகளுக்குள் ளாகி பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக் குட் படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப் பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.

'எதற்காக எழுதுகிறேன்?' என்று நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப் படவும், திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.

எனது கொள்கையில் குறையில்லாதபோதும் எனது திறமைக் குறைவால் நான் தோற்றும்போகலாம். அது தோல்வியாகாது. போர்க்களத்தில் சந்தித்த மரணத்திற்கு நேராகும் அந்தத் தோல்வி. என் கையி லிருக்கும் கொடி இன்று கேலி செய்யப்படலாம்; பிடுங்கி எறியப்படலாம். ஆனால் அதுதான் நாளைய உலகில் எல்லோரின் தலைக்குமேலும் பறக்கப் போகிறது. அந்த நாளைய உலகை நிர்மாணிக்கும் மஹா சமுத்திரத்தில் நான் ஒரு துளி. என் எழுத்து ஒரு அலை!

ஆர்வி

கலைமகள் காரியாலத்திலிருந்து வெளிவரும் கண்ணன் பத்திரிகையின் ஆசிரியர். குழந்தை களுக்கு எழுதுவதுடன் பெரியர்வகளுக்கும் எழுதுகிறார். அவருடைய நாவல்களில் ஆரம்ப காலத்து முயற்சிகளில் சில இலக்கியத்தரமான வையாகவும், பின்னர் அந்த முயற்சிகள் தொடர்கதைகளாகவும் வெற்றி பெற்றன. ஒரு ஜிலு ஜிலுப்பான நடையும் மக்கள் மனப் போக்கு அறிந்து கதை சொல்வதும் அவரு டைய தனிச் சிறப்புகள்.

நம்முடைய நண்பர் ஒருவர் டெலிபோனிலே கூப் பிட்டு ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும் என்கிறார். எதற்காக அந்த விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டும் என்று நமக்குப் புரியவில்லை. இருந்தாலும் கூப்பிட்டுப் பேசுகிற நண்பர் அதைப் புரிந்துகொண்டு தான் பேசுகிறார் என்று நமக்குத் தோன்றுகிறது. ஒப்புக் கொள்கிறோம்.

அப்புறம் பார்க்கிறபோது ஏன் ஒப்புக்கொண்டோம் என்று எண்ணுகிறது மனசு. விவஸ்தை கெட்ட மனசு தானே? அது எதை வேண்டுமானாலும் எண்ணுகிறது. நமக்குப் பொறுப்பு இருக்கிற விஷயங்களையும் எண்ணு கிறது. இல்லாதவற்றையும் எண்ணுகிறது. துணிச்சல் இருக்கிற, தெம்பு இருக்கிற விஷயங்களையும் எண்ணு கிறது; இல்லாதவைகளையும் கூடவே எண்ணுகிறது.

ஒருகால் கூப்பிட்டுப் பேசச் சொல்கிற நண்பரும் ஒன்றும் புரியாமல் ஏதோ வாயில் வந்த தலைப் பைப் போட்டுப் பேசக் கூப்பிட்டிருக்கிறாரோ என்ற சந் தேகம் வருகிறது. சிறிது நேரம் அந்தச் சந்தேகத்தி லேயே மிதந்து கொண்டிருக்க வேண்டும்போல் இருக்கிறது. அப்படி மிதக்கிற சமயத்திலே, வேடிக் கையான வேண்டாத காரியங்கள் எல்லாம் மனத்திலே ஓடுகின்றன. வெறும் கிண்டலுக்காக, குறும்புத்தன மாக இதை அந்த மனிதர் செய்திருக்கலாம்; அல்லது வாயைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம் என்றும் இருக்கலாம். நமக்குத் தெரிந்த நாலுபேரோடு, நமக்குத் தெரியாத, பிடிக்காத, விளங்காத விஷயங் களைப் பேசிப் பொழுது போக்கலாமே என்றும் இருக் கலாம். எப்படிப் பார்த்தாலும் சொல்கிறவர் அப்படி யும் செய்யக் கூடியவர் ஆச்சே என்று சந்தேகப் படு கிறோம்.

சரி; பேசுவதற்காகக் கூட்டத்துக்குப் போகா மலே இருந்து விட்டால் என்ன என்று எண்ணம் தோன்றுகிறது. போவது, ஆனால் பேசாமல் இருந்து விடுவது என்றும் நினைக்கிற கட்டமும் வருகிறது. சேசே எதைப் பற்றிப் பேசவேண்டியிருந்தால்தான் என்ன? நாலு வார்த்தை பேசமுடியாமலா போய்விடும்? பேசு வதற்கு விஷயமே இல்லாமல் எத்தனை பேர் இப்போது பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்! பேசவும் தெரியாமல் விஷயமும் இல்லாமல் எத்தனைபேர் பேச வந்து விடு கிறார்கள்! எதைப்பற்றி வேண்டுமானாலும் எத்தனை நேர

மானாலும் பேசமுடியும் என்று மார்தட்டுகிற அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள். பாட்டிலே, ஏட்டிலே இருக்கிற ஓர் அடியை வைத்துக்கொண்டு பன்னிப் பன்னிப் பேசுகிற வாசாமகோசரங்கள் எத்தனை! மெயில் கிளம்புவதற்கு முன்னால் சமயக் கூட்டம், சாத்திரக் கூட்டம், இலக்கியக் கூட்டம், சுடுகாட்டாங்கரைக் கூட்டம் என்று பேட்டைக்குப் பேட்டை போய் பீடிகையாகவே பேசிவிட்டு ஓட்டமாய் ஓடுகிற 'மொபைல்' பேச்சாளர் பெருமகனார்கள் எத்தனை பேர்! இருக்கிற ஊர் போதாதென்று, காண்டிராக்ட் டிராமா நடிகர்களைப் போல, ஊரைவிட்டு ஊர் போய் ஊளறுவதையே உளறிவிட்டு, வந்து அந்த ஊர் ஊறுகாயைப் பற்றி வாயில் நீர் ஊற வம்படிக்கிற கச்சேரி பேச்சாளர் எத்தனைபேர் ? பெண்மணிகளைப் போல் தளுக்கும் குலுக்குமாய், பேசும் ஆண்கள் எத்தனைபேர்? ஆண்கள் கெட்டார்கள் என்று, அவர்களுக்கும் ஒருபடி மேலேபோய் சிலம்பம் ஆடிசலாம்வரிசை எடுக்கிற பேச்சாளர் நாரீமணிகள் எத்தனைபேர் ? இப்படிப்பட்ட யுகத்திலே வாழ்ந்து ஒரு நாலு வார்த்தை, தப்பு இல்லாமல், தடங்கல் இல்லாமல், கேட்கிறவர்கள் காதிலே விழும்படியாகப் பேசத் தெரியாவிட்டால், அல்லது பேச்கை எழுதிப் படித்துத் தொலைக்கவாவது தெரியாவிட்டால், நாம் என்ன ஆண்பிள்ளை! அப்புறம் எதற்காகத்தான் நானும் மனிதன் என்று பிழைக்கிறோம் அல்லது பிழைக்கத் தெரியாமல் தடுமாறுகிறோம்?—

மனசு, இப்படியெல்லாம் நம்முடைய பலவீனங்கள், கோளாறுகளைச் சுட்டிக்காட்டிக் கிண்டல் செய்கிற பெண்டாட்டியைப்போல நம்மையே நையாண்டி செய்கிறது. அதற்கு!

அப்புறம்தான் பேசித் தீர்த்துவிடுவது என்று நமக்கே துணிச்சல் பிறக்கிறது. தலைப்பைப்பற்றி, தலை போகிற விஷயம்போல யோசனை செய்து பார்க்கக் கிளம்புகிறோம். வருகிறோம் என்று உங்களையும் சேர்த்துப் பன்மையில் சும்மாவாவது சொன்னேனே தவிர, இதெல்லாம் என்னைப்பற்றித்தான் சொல்கிறேன். இல்லை, உங்கள் முன்னால் வந்து நிற்பதற்கு முன் நடந்த என் கதை அதுதான்.

'எதற்காக எழுதுகிறேன்'? என்று இந்தத் தலைப்பைக் கொடுத்த நண்பர் கேட்டுப் பார்த்துக்கொண்டிருப்பார் போலிருக்கிறது. உண்மையில் இதை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவு கட்டிவிட வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டாரோ அல்லது எழுதிச் சலித்து இளைத்துப் போய்த்தான் கேட்டுக்கொண்டாரோ யார்கண்டார்கள்? கடைசியில் ஏமாந்தவர்களையும் இழுத்துப் போட்டு, 'வாங்க ஐயா நம்ம பாதையிலே கொஞ்ச தூரம்' என்று பழிதீர்த்துக்கொண்டு விட்டார். அது எப்படியோ போகட்டும்.

எதற்காக எழுதுகிறேன் என்று உண்மையில் ஒருமுறையாக, தீவிரமாக மனச்சாட்சிக்கு முன்னால் நான் நேற்றுத்தான் எண்ணிப்பார்த்தேன். இதுவரையில் அப்படி என்னையே கேட்டுப் பார்த்துக்கொள்கிற துணிச்சல் எனக்கு ஏன் வரவில்லை என்பது இப்போதுதான் புரிந்தது. என்னைப்போல இங்குள்ளவர்கள் சிலருக்கும் இந்தமாதிரி புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். அல்லது நான் மட்டும் தனிப்பட்ட 'கேஸாகவும்' இருக்கக் கூடும். முன்னால் ஒன்றும் புரியாமல் ஐம்பது வயதுக்கு மேல் இரண்டாந்தாரம் மூன்றாம்தாரம் செய்துகொண்டு பின்னால் புரிந்து கொள்கிற கேஸ். அப்படி ஒன்றும் தனிப்பட்ட கேஸாக இருந்துவிடாது என்கிற தெம்புதான் இப்போதும்......அது எப்படி இருந்தால் என்ன? என் கதையல்லவா இப்போது நடக்கிறது! அதற்கு வருகிறேன்...

வருகிறேன் என்று சொல்லும்போதே எனக்குத் தயக்கமாக இருக்கிறது; கூச்சமாக இருக்கிறது; ஓரளவு கௌரவக் குறைவாகக்கூட இருக்கிறது. எதற்காக எழுதுகிறேன் என்று எனக்கு இன்னும் தெளிவாகப் புரியவில்லை.

கிட்டத்தட்ட இருபது வருஷத்துக்கு முன்னால் இப்படி ஒரு கேள்வி என் மனசிலே எழாமலா இருந்திருக்கும் ? எழுந்து, விடை கிடைக்காமலேயா போயிருக்கும் ? கிடைத்தது. ஆனால் கிடைத்த விடை சரியான விடையா என்பதில்தான் இப்போது தகராறு வந்து விட்டது.

ஏதோ என் ஆத்ம திருப்திக்காக எழுதுகிறேன் என்று எனக்கும் சொல்லிக் கொண்டேன். என்னை வந்து கேட்கிறவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். ஆத்ம திருப்தியாவது ? எது ஆத்மா—எது திருப்தி ? தெரிந்தா, பூரணமான பொருள் புரிந்தா இப்படிச் சொன்னேன் ? சேசேசே—நான்சென்ஸ்—ஒருகாலும் இல்லை! பிறரை பிரமிக்க வைப்பதற்காக, என்னையே ஏமாற்றிக்கொள்வதற்காகவும் அப்படி ஒரு பெரிய டூப் அடித்திருக்கிறேன்; பெரியவர்கள், அநுபூதிகள், மகான்கள், மகாகவிகள் சொல்லுகிற வார்த்தை அது. அதைச் சொன்னால் தப்பில்லை என்று தைரியமாக எடுத்து சும்மா விட்டிருக்கிறேன். அதைத் தவிர வேறு என்ன ? ஐந்து வயது பொடியன் ஒருவன் சிலசமயங்களில் ஐம்பது வயதுக்காரன் பேசுகிறதைப் போல் அவன் பேசுகிற வார்த்தைகளைக்கூட அப்படியே பேசிவிடுவது இல்லையா ? அந்தக் கணக்குத்தான் இதுவும்.

இந்தக் கேள்வியை உள்ளபடி ஒருமுறை புரட்டிப் பார்க்கிறபோது எடுத்த சங்கியை இதுதான்: காசுக்காக எழுதியிருக்கிறேன் ; ஆசைக்காக எழுதியிருக்கிறேன், ஆளுக்காக எழுதியிருக்கிறேன் ; அநாவசியமாக எதற்காக எழுதியிருக்கிறோம் என்பதே தெரியாமலும் எழுதியிருக்கிறேன். பொழுது போக்காக எழுதியிருக்கிறேன். பொழுதைப் போக்காமல் இருப்பதாகவுங்கூட எழுதியிருக்கிறேன். வீண் பெருமைக்காக எழுதியிருக்கிறேன். உண்மைப் புகழை நாடியும் எழுதியிருக்கிறேன். சுருக்கமாகச் சொன்னால் இன்னும் விட்டுப் போனது ஏதாவது இருந்தால், போட்டிக்கு, முடைக்கு வெட்டிக்கு, பயத்துக்கு, பழிசாற்றுவதற்கு பழி வாங்குவதற்கு என்று இல்லையா அத்தனைக்காகவும் நான் எழுதியிருக்கிறேன். அந்த நிலையிலும் நான் சொல்லிக் கொண்டு வந்திருக்கிற பதில் என்னவென்று நினைக்கிறீர்கள் ? ஆத்ம திருப்திக்கு என்றுதான்!

அட, என்னை வந்து ஒருவர் ஒரு பொருட்டாக மதித்துக் கேட்காமல் இருக்கலாம் ; நானும் அவரை மதித்துப் பதில் சொல்லாமலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் கேட்டிருந்தால் நான் சொல்லியிருக்கக்கூடிய பதில் வேறு என்னவாக இருக்க முடியும் ?

ஆனால் இடக்கரடக்கலாகப் பார்த்தால் மேலே சொன்னது எல்லாமே ஆத்ம திருப்தி என்று சொல்ல முடியாதா ?

கசுநாறிப் பத்திரிகைக்காரன் ஒருவன் ஒரு கதைக்கு எத்தனையோ வருஷமாக இருபது ரூபாய்க்குமேல் கொடுக்கமுடியாதபோது, எழுபத்தைந்து ரூபாய்

கொடுக்கிற பத்திரிகைக்காரனுக்கு, அவன் அனுப்பின கதையைத் திருப்பியனுப்பினலும் ராவுக்குராவே உட்கார்ந்து வேறு ஒன்று எழுதியனுப்பிவிட்டு, செக்காக அனுப்புவாரு பணமாக வருமா என்று ஆசைப்படுவதில் கூட ஆத்ம திருப்தி இல்லை என்று சொல்லமுடியுமா ?

உறவு முறையோ, உரிமையோ அதிகப் பழக்கமோ, சினிமாவில் காட்டுவதைப்போல பாலிய முதல் காதலோ இல்லாத இடங்களில் ஓர் உறவு எப்படியோ நேர்ந்துபோய், அதைச் சொன்னல் தலை போகாது என்ற நிலையில் ரகசியமாக நண்பர்களிடம் சொல்ல ஆசைப்படுவதுபோல், சொல்லி இன்பப்படுவதுபோல் பத்திரிகைகளிலும் எழுதி, தானும் சம்பந்தப்பட்ட புள்ளியும் மட்டும் தெரிந்துகொண்டு ஆனந்தமோ ஆத்திரமோ படுவதில்கூட ஆத்ம திருப்தி இருக்கத்தான் இருக்கிறது. இல்லை என்று மறுக்கிறவர்கள் மறுத்துவிட்டுப் போகட்டுமே!

இன்னும் நேரில் திட்டமுடியாத ஆட்களை, எஜமானர்களை, எதிரிகளை பெயரை மாற்றிப்போட்டு இஷ்டப்படி தீர்த்துக் கட்டுகிறபோது ஏற்படுகிற இன்பத்துக்குப் பெயர் ஏதாவது இருந்தால் அது என்ன ? அதிலும் ஆத்ம திருப்தி இருக்கிறது என்று சொல்ல முடியாதோ ? கொடுத்த கடனைத் திருப்பி கொடுக்காதவன், மறந்துபோனதுபோல இருப்பவன், மனைவிப் பொருத்தம் இல்லாதிருப்பவன், நம்மைவிடப் பல விதங்களில் அனுபவிக்கக் கொடுத்து வைத்தவன், ஏமாளியாக இருப்பவன், எட்டுத்தரம் கண்டதை தின்பவன், சீர்திருத்தம் என்றும், பக்தி என்றும், அரசியல் என்றும், கலை என்றும் பொதுப்பணி என்றும் ஆஷாடபூதிகளாகத் தகிடுதத்தம் பண்ணுகிறவன்—இவர்களையெல்லாம் பேனச் சித்திரமாகத் தீட்டி மகிழ்வதில் பயன் எதுவும் ஏற்படாமல் போனல் போகட்டும் ; நமக்கு ஒரு திருப்தி ஏற்படுகிறது என்பதை மறுக்கமுடியுமா ? அது வெறும் கபோதித் திருப்தி என்று சொல்லி வாயை அடக்கலாமே தவிர, ஆத்ம திருப்தி இல்லை என்று அடியோடு சொல்லிவிட முடியாது.

மிகவும் அருமையான சில நல்ல வார்த்தைகள், பெயர்கள் எல்லாம் சகவாச தோஷத்தினலும் சொல்லக் கூடாதவர்கள் சொல்வதனலும் மதிப்பை இழந்து தேவடைக் காசாக ஆகிவிடுவதைப் போல, இந்த ஆத்ம திருப்தி என்ற வார்த்தைக்கும் இப்படி ஒரு கதி நேர்ந்து விட்டது என்று வேண்டுமானல் சொல்லி விட்டுப் போகட்டும், அதைத்தவிர இதற்குச் சரியான விடை சொல்ல வேறு வழியில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

ஏன் எழுகிறேன் என்ருல், ஏமாந்து போய்ப் பத்திரிகைகளில் வெளியிடவும், போட்டதைப் புரிந்தோ புரியாமலோ படித்துவிட்டு, பெயர் அச்சில் வர வேண்டுமென்று ஆசைப்பட்டு ஆசிரியருக்கு அங்கிருந்தும் ஆளைவிட்டும் எழுதச் சொல்கிற பிருகஸ்பதிகள் அந்தப் பத்திரிகைகளைப் படிக்கவும், ஆட்கள் பெருங் கூட்டமாக இருக்கிருர்கள் என்பதால் எழுதுகிறேன் என்று சொல்லாம்.

எழுதுவதற்கு இன்னமும் தெம்பும் வசதியும் பொழுதும் இருக்கிறது, அதனல் எழுதுகிறேன் என்றும் சொல்லாம்.

இவன் எல்லாம் ஏண்டா எழுதுகிருன் என்று சில சட்டாம்பிள்ளைகளிடம் பாட்டு வாங்க வேண்டும், அவர்கள் பேனவில் காரியமிருந்தோ காரிய மில்லாமலோ புகுந்து புறப்பட வேண்டும், என்கிற தலைவிதி போட்டிருக்கிறது, எழுதுகிறேன் என்றும் சொல்லலாம். செத்தவனைத் தவிர மற்றவனைப் படியேன் என்கிறவனுடைய மனத்தை என்று நான் மாற்றப் போகிறேனே என்பதற்காக எழுதுகிறேன் என்றும் சொல்லலாம். பல்கலை, தொல்கலை, தென்கலை நுண்கலைப் பேராசிரியர் திருக்கூட்டம் கைவைக்காத, வைக்க முடியாத இடத்தில் போய் உட்கார்ந்து கொள்ள முடியாத நப்பாசையால் எழுதுகிறேன் என்றும் சொல்லலாம். இன்னும் என் முன்னேர்களும் பின்னேர்களும் கடைத்தேறுவதற்காக எழுதுகிறேன் என்றும் சொல்லலாம்.

சொல்வதற்கு என்ன ? சொல்வது எல்லாவற்றுயுமா இங்கே இருப்பவர்கள் நம்பிவிடப்போகிருர்கள் ? எல்லாவற்றிற்காகவும்தான் எழுதுகிறேன் என்று சொல்கிறேன். பயம் என்ன ? சாகத் துணிந்தவனுக்குத் தலைக்குமேல் சாண்போனல் என்ன ? முழம் போனல் என்ன ?

என் வரையில் எனக்குப் பட்டதை நான் சொல்லி விட்டேன். அப்புறம் உங்கள் பாடு! கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள்.

சாலிவாஹனன்

தமிழ் இலக்கியத்தின் இன்றைய சரித்திரம் எழுதப்படும்போது மணிக்கொடியுடன் இடம் பெறக் கூடிய பத்திரிகையாக, இரண்டு வருஷங்கள் திகழ்ந்த கலாமோஹினி நிச்சயம் இடம்பெறும். அதன் ஆசிரியர் சாலிவாஹனன். பத்திரிகை நடத்தும்போது அவர் கல்லூரிப்படிப்பா, பத்திரிகையா என்ற போராட்டம் எழுந்தபோது படிப்பைத் தியாகம் செய்து விட்டவர். கவிதை தவிர சிறுகதைகள், கிண்டல் கட்டுரைகள், ஆணித்தரமான விமர்சனங்கள் சிலவும் எழுதியுள்ளார். கவிதையில் ஒரு வேகமும், வசனத்தில் ஒரு கிண்டலும் அவர் சிறப்புக்கள்.

நீ ஏன் எழுதுகிருய் ? என்று கேட்க மாட்டாமல் தான் இந்தச் சிந்தனைத் தொகுப்புரை அரங்கை ஏற்பாடு செய்தவர்கள் என்னைப்போன்ற ஒருவனை "நான் ஏன் எழுதுகிறேன்" என்று காரணங் காட்டி விளக்கும் படி கேட்டிருக்கிருர்களோ என்று தோன்றுகிறது.

சிந்திக்கத் தெரிந்துகொண்ட நாள் முதல் மனித குலம் சிந்திப்பதை முழுநேரத் தொழிலாக இல்லா விட்டாலும் ஒரு ஓழிந்த வேளைத் தொழிலாகவாவது மேற்கொண்டு தான் இருந்திருக்கிறது.

இப்படி ஒழிந்த வேளைகளில் சிந்தித்து சிந்தனைச் செல்வர்களாக விளங்கும் சமுதாயம் ஒன்று கூட நம்மிடையே வளர்ந்தோங்கியுள்ளது. இந்த சமுதாயத்தினரில் எவரையும் பார்த்து 'நீர் ஏன் சிந்திக்கிறீர் ?' என்று எந்த ஒரு தீரபுருஷனும் கேட்கத் துணிந்ததில்லை.

சிந்திப்பதற்குள்ள உரிமையைப் பறிக்க விஞ்ஞான உலகமும் சரி அரசியலும் சரி இன்னமும் ஒரு நல்ல வழியைக்கண்டு பிடித்து விடவில்லை. அதனல் தான் மனித சமுதாயத்தில் ஆங்காங்கு இன்னும் சிலர், தத்தமது வாழ்வின் பிரதான அலுவல்களான உப்பு, புளி, அரிசி,

கோதுமை, துணிமணி முதலிய ரேஷன் செய்யப்படாத சாமான்களை வாங்குவதற்கான நேரம் போக மிஞ்சியிருக்கும் ஓரிருகணங்களைச் சிந்திப்பதற்கும் செலவிட்டுச் சிந்தனைச் சிற்பிகளாகவும் செல்வர்களாகவும் பரிண மித்து வருகிறார்கள். அந்த மானிடர்களையெல்லாம் பார்த்து நீங்கள் ஏன் சிந்திக்கின்றீர்கள்? என்று கேட்டால் ஏற்படக்கூடிய பலன்களைக் கேள்வி கேட்டவர்கள் அனுபவிக்க வேண்டிவந்து விடும் என்று பயந்தே அவர்களைக் கேட்காமல் விட்டிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவி லாண்டி" என்பதற்கேற்ப, எந்தக் கேள்வியையும் வாங்கிக்கட்டிக்கொண்டு, அதற்காகக் கேள்வி கேட்டவருக்கு யாதொரு தீங்கும் இழைக்காமல் சும்மா இருக்கக்கூடியவன் கவிதை எழுதும் இந்த ஆண்டிதான் என்று இந்தச் சிந்தனைத் தொகுப்புரை அரங்கைக் கூட்டியவர்கள் நினைத்திருந்தால் அவர்களிடம் நான் சொல்லுகிறேன். இம்மாதிரி கேட்கத்துணிந்த உங்களை நான் ஏன்னென்ன பாடுபடுத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே அவற்றையெல்லாம் நடைமுறையில் செய்து காட்டுவதற்கு வேண்டிய திறன் என்னிடம் இல்லை என்ற துணிச்சலில்தான் நீங்கள் இந்த கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள்!

இதே கேள்வியைக் காலதேசவர்த்தமானத்தை நன்கு அனுசரித்துக் கொண்டு, ஆளுக்கும் அவசரத்திற்கும் ஏற்றபடி எழுத்தை கனரகப் பெருந் தொழிலாக நடத்தும் எனது சகோதரர்களில் ஒருவரிடம் கேட்டிருந்தால் உங்களது கதி இதற்குள் என்ன ஆகி இருக்கும் என்பது உங்களுக்கே நன்கு தெரியும்!

இவ்வளவுக்கும் நான் ஒன்றும் உங்களில் எவரையும் விட எண்ணிக்கையிலும் சரி எடையிலும் சரி அதிகமான கதைகளையோ, கட்டுரைகளையோ, நாவல்களையோ, நெடுந்தொடர் கதைகளையோ, தொடர் நீண்ட கட்டுரைகளையோ, ஓரங்க, சதுரங்க நாடகங்களையோ, இந்த இருபத்தெட்டு வருஷ இலக்கிய வாழ்வில் எழுதிவிடவில்லை.

எழுத்துக் கூட்டி வாசிப்பவர் முதல் தத்தமது வெளிநாட்டன்பர்களிடம் தமிழ்பற்றித் தெரித்தவர் போல் பேச வேண்டும் என்பதற்காகத் தமிழ்படிப்பவர் ஈருக உள்ள பலரக வாசகர்களுக்கும் புரியக் கூடிய விதத்தில் தமது நடையைப் பண்படுத்திக் கொண்டு ஆயுட்காலமுழுதும் எள்ளத்தனைபொழுதும் வீணுக்காமல் கூட்டுறவு எழுத்து விவசாயம் செய்யும் எத்தனையோ பேர்களை ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறீர்கள்!

அவர்களையெல்லாம் கேட்காமல் ஒருவரும் சீந்தாத நவீன சிந்தனைகளின் ராக்கெட் வேகத்திற்குத் துளிக் கூட ஈடுகொடுக்க திராணியற்ற பழங்கவிதை என்ற நைந்து ஜரிகை உதிர்ந்த பீதாம்பரத்தைக் கட்டிக் கொண்டு எப்போதாவது ஆடிக்கொருமுறை அமாவாசைக் கொருமுறை கூப்பிட்டபோது உங்களிடையே திருஷ்டிக்கு வைத்த பொட்டைப் போல் வரும் என்னைப் பார்த்து 'ஏன் எழுதுகிருய்? என்று எனது நண்பர்கள் என்று கூறிக்கொள்ளும் நீங்கள் கேட்பது நியாயமாகுமா?

இத்தனைக்கும் சிறுகதை, குறுநாவல், தொடர் கட்டுரைகள், புதுக் கவிதைகள், திறனாய்வுகள், முதலிய எல்லாத்துறைகளிலும் உங்களில் பலர் அடிக்கடி மூழ்கிப் புனலாடுவதைப்போல், ஆட நான் என் எழுத்துணர்வை அடிக்கடி தட்டி எழுப்பிக் கொள்வதில்லை.

என்னுடைய கவிதைத் தெய்வமான பராசக்தி நான் தொழுது கூப்பித் தினமும் வேண்டும் பிரார்த்தனைகளுக்கு எப்போதாவது செவிசாய்த்து அருள் கனிந்து யாராவது ஒரு தேசத்தலைவரைத் தன்பால் அழைத்துக் கொண்டால் மட்டுமே என் கவிதாசக்திக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும் கேவல நிலையில் உள்ள என்னைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்ட உங்களுக்கு ஒரு வாக்கியத்தில் வார்த்தையில் பதில் சொல்லியிருப்பேன். தாகம் எடுத்தது தண்ணீர் குடித்தேன். பசித்தது சாப்பிட்டேன்' என்று.

உயர்ந்த பட்ச உடம்பும் அதமபட்ச உயிரும் படைத்தநவீன சமுதாயத்தின் ஒற்றைப் பிரதிநிதியான நான் அப்படிச் சுருக்கமாக ஒரு தனி வார்த்தையில் பதில் சொல்லிவிட்டால் சமுதாயத்தின் கண்முன் இந்தக் குற்றத்திற்காக எனக்குக் காத்திருக்கும் தண்டனைகளைச் செல்லுபடியற்றவையாக ஆக்குவதற்கு வேண்டிய அரசியல் ஞானமா எனக்கிருக்கிறது?

சிந்தனைச் சுடர்கள் என்ற வகுப்பைச் சேர்ந்தவரும் எனது நண்பருமான ஒருவர் அடிக்கடி தனது விலையுயந்த பாதரட்சைகள், ஆடை, கடிகாரம் முதலிய வற்றின் உயர்மதிப்பு, தனித்தன்மை, கிடைத்தற்கருமை தூரதேச நுணுக்கத்திறன், ஆகியவற்றை என்னிடம் தெரிவித்து நீரும் ஏன் ஐயா பாதரட்சை, ஆடை, கடியாரம் இவற்றை முறையே அணிகிறீர், உடுத்துக் கொள்கிறீர், கட்டிக்கொள்ளுகிறீர்? என்று கேட்டுவிட்டு, மேற்கண்ட ஜடப்பொருள்கள் தம்மை வந்தடைந்ததால் தத்தமது சாயுஜ்யத்தைப் பெற்றுவிட்டன என்றும் நான் அந்தவஸ்துக்களின் கீழ்க்கடைதனியன்களில் ஒவ்வொன்றை எனது உபயோகத்திற்கு மேற்கொண்டு விட்டதால் அவ்வவற்றின் வர்க்கத்திற்கே இழிவேற்பட்டு விட்டதென்றும் பொருள்தொனிக்கப் பேசுவார். அந்த ரீதியில் நாங்கள்தான் எழுதுகிறோமே நீரும் ஏன் எழுதுகிறீர் என்றுதான் இந்தச் சிந்தனைத் தொகுப்புரை அரங்கைக்கூட்டியவர்கள் கேட்டு விட்டார்களோ என்று கூட எனக்குத் தோன்றிற்று.

தமது தனித் தன்மையில் பரம நம்பிக்கையுள்ள சிந்தனைச் சுடரான எனது நண்பர் நான்தான் படிக்கிறேனே நீரும் ஏன் ஐயா இலக்கியங்களைப் படிக்கிறீர் என்றோ, நான்தான் ஒருவன் பிறந்திருக்கிறேனே நீரும் ஏன் ஐயா பிறந்தீர் என்றோ, ஒருதடவை கூட இன்னமும் கேட்கவில்லை.

அப்படி இருக்கும்போது நாங்கள்தான் எழுதுகிறோமே நீரும் ஏன் எழுதுகிறீர் என்று நீங்கள் கேட்பது உங்கள் பெருந்தன்மைக்குப் போதிய தாகுமா? நான் எழுதினதால் மட்டும் கவிதைத் துறை உருக்குலைத்து போய்விடுமென்றால் இந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் கவிதை இருந்த இடம் புல்முளைத்துப் போயிருக்க வேண்டுமே.

அப்படி ஒன்றும் நேர்ந்து விடவில்லை. நான் கவிதை எழுதத் தலைவைத்த பிறகு லட்சக் கணக்கில்லா விட்டாலும், ஆயிரக்கணக்கிலாவது தமிழ்க் கவிஞர்கள் வீறிட்டெழுந்திருக்கின்றார்கள். இவனே கவிதை எழுதத்துணிந்து விட்ட பிறகு நாம் ஏன் எழுதக் கூடாது என்ற தைரியத்தை என் கவிதை பல்லாயிரக் தணக்கான தமிழ்க்கவிஞர்களுக்கு ஊட்டி விட்டிருக்கிறது நான் எழுதிய கவிதைகளாலேயே தமிழ்க்கவிதைத் துறைக்கு எவ்வித பழுதும் ஏற்படவில்லை என்ற உண்

மையை உணர்ந்த ஆயிரக்கணக்கான இளம், முற்றல் கவிஞர்கள் கவிதைப் பள்ளயங்களைத் தமிழ்த்தாயின் திருமுன்னர் படைக்கத் துணிவு பெற்றிருக்கிறார்கள். அதோடு சாப்பிடமாட்டேன் என்று முரண்டுபிடிக்கும் குழந்தைக்குத் தாய் சாதத்தை ஊட்டி விடுவதுபோல், நமது தமிழ்க் கவிஞர்கள் ஊட்டிக்கூட விட்டிருக்கிறார்கள்!

இதுவரை உபயோகிக்காத பல புதிய தேவைகளுக்குக் கவிதையை நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம் என்று நிரூபித்திருக்கிறார்கள். நான் கவிதை எழுதத் தலை வைத்த பிறகுதான், அரசாங்கத்தின் பஞ்சாயத்து, கர்ப்பத்தடை, மாதர்நல, சமூகநலத்தேவைகளைக் கவிதை மூலம் பூர்த்திசெய்து கொள்ளலாம் என்ற உண்மை புலனாயுள்ளது.

பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அதிகப்படிக் கவிதைகளைப் பிரசுரித்தால் அவற்றின் உயிருக்கே ஹானி ஏற்பட்டு விடும் என்ற மூடநம்பிக்கையை என்னுடைய கவிதைகள் சிதற அடித்துள்ளன. அதோடு வாரந்திர, மாதாந்திர, மாதமிருமுறை மும்முறை சஞ்சிகை வாசகர்களுக்கு கவிதையால் எவ்வித நோயும் வராது என்ற உத்தரவாதத்தைக் கூட என் கவிதைகள் தான் ஓரளவுக்குக் கொடுத்திருக்கின்றன.

இவ்வளவு சமுதாய விளைவுகளை ஏற்படுத்திய என்னைப் பார்த்து "நீயும் ஏன் எழுதுகிறாய்?" என்று என்ன தைரியத்தில் கேட்கிறீர்கள் நீங்கள்?

கு. அழகிரிசாமி

சிறுகதைத்துறையில் முற்போக்குச் சிந்தனையையும், கவிதைத் துறையில் பழமையையும் அதிமாகப் பாராட்டுபவர். தமிழை ஓரளவுக்கு முறையாகப் படித்தவர். அப்படிப்படித்திருந்தும் நல்ல தமிழும், நல்ல சிறுகதைகளும் எழுதுகிறார். இடைக்காலத் தமிழ்ப் பிரபந்தங்கள், கவிதைகள் பற்றி ஒரு வரிசை நூல்கள் எழுதி இருக்கிறார். நாலைந்து நல்ல சிறுகதைத்தொகுதிகள் எழுதியிருக்கிறார். பத்திரிகைத் துறையில் (சக்தி, கோலாலம்பூர் தமிழ்முரசு, இப்போது நவசக்தி) ஈடுபட்டவர்.

எதற்காக எழுதுகிறேன்?

இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது சுலபமான காரியமல்ல என்பது, என்னைப் பார்த்து ஒரு முறை இக் கேள்வியைக் கேட்டுக் கொண்ட பிறகுதான் தெரிந்தது. சுலபமல்ல என்பதைவிட மிகமிகக் கஷ்டம் என்று கூறுவதே இன்னும் சரியாக இருக்கும்.

'நான் யார்?' என்பதை அறிய அதாவது தன்னை அறியப் பல ஞானிகள் பல காலம் அரும்பாடு பட்டிருப்பதாகப் படிக்கிறோம். தன்னை அறிந்த ஞானியை மகா ஞானி என்பார்கள். இதிலிருந்து தன்னை அறிவது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது தெரிய வருகிறது. அதைப் போலக் கஷ்டமான ஒரு வேலைதான், "எதற்காக எழுதுகிறேன்?" என்பதைக் கண்டு பிடிப்பதும்.

என்னையே நான் ஆராய்ந்தேன், பல வருஷங்களைச் செலவழிக்காமல்— அதற்கு அவகாசம் இல்லை; அவசியமும் இல்லையோ என்னவோ—பல நிமிஷங்களை மட்டும் இந்த ஆராய்ச்சியில் செலவழித்தேன்.

நான் எழுதுவதற்கு முதலில் எந்த ஒரு காரணமும் புலப்படவில்லை. நான் எழுதுகிறேன், அதனால்தான் எழுதுகிறேன் என்ற நிலைமை மட்டுமே புலனாயிற்று. இதுவே முழு உண்மையாகவும் இருக்கக்கூடும். ஆனாலும் இப்படி ஒரு காரணத்தைச் சொல்லுவது எப்படி? காரியமும் காரணமும் ஒன்றாக அல்லவா இருக்கின்றன. என்று, இன்னும் கொஞ்சம் துருவி ஆராய்ந்தேன். எந்த நியாயத்துக்கும் நியாயமே காரணம், எந்த இயற்கைக்கும் இயற்கையே காரணம், எந்த இயல்பான காரியத்துக்கும் அந்தக் காரியமே காரணம் என்பதைக் கண்டறிந்தேன். இருந்தாலும் திட்டவட்டமாக, கையில் பிடிபடும்படியாகச் சில உண்மைக் காரணங்களை, அல்லது விபரங்களை என்னுள்ளே நான் தேடினேன்; சிலவற்றைக் கண்டறிந்தேன். இந்தச் சில என்பது பல ஆகவே இருக்கக்கூடும், அனைத்துமாகவே இருக்கவும் கூடும். நான் கண்டறிந்தது ஒரு கோடிதானா. அல்லது பூரணமா என்பதை வரையறுக்க முடியவில்லை, எந்த இயற்கையைத்தான் வரையறுக்க முடிகிறது?

திரும்பத்திரும்ப "இயற்கை" என்ற சொல்லை நான் அதிகமாக உபயோகிப்பதைக் கவனித்தால், நான் எழுதுவதற்கு என் இயற்கையே காரணம் என்பது நான் சொல்லாமலே வெளிப்படுகிறது. அது உண்மை என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த மாதிரியான இயற்கை அமைந்ததற்கு என்ன காரணம் என்பதையும் ஆராய எண்ணி அப்புறம் அது தனி ஆராய்ச்சி, இங்கே அதற்கு அவசியமில்லை என்று விட்டு விட்டேன்.

சரி, என் இயற்கை என்ன?

எத்தனையோ இயற்கைகள், இயல்புகள் இருக்கக்கூடும். ஆனால் அடிப்படையாக அமைந்து, என்னை இயக்குவதையும் எழுதச் செய்வதையுமே நான் இங்கே கூறவேண்டும்.

நான் மனிதனாக வாழ விரும்புகிறேன். இந்த விருப்பமே நான் குறிப்பிட்ட என் அடிப்படை இயற்கை. 'மனிதனாக' என்பதையும் 'வாழ' என்பதையும் தனித் தனி விஷயங்களாக்கிச் சொல்லுவதற்கு எவ்வளவோ இருக்கிறது.

மனிதன் என்றாலே உலகத்து ஜீவராசிகளில் மேல் நிலை எய்தி இருக்கும் ஒரு பிராணியைக் குறிக்கிறது. அடுத்தபடியாக சுதந்திரமாக இருப்பவனையே மனிதன் என்ற வார்த்தை குறிக்கிறது. அடிமைக்கோ, கொடியவனுக்கோ, நயவஞ்சகனுக்கோ சுயநலமிக்கோ இந்த வார்த்தை பொருந்தாது. அவனிடம் மனிதத் தன்மை என்பதே கிடையாது.

நான் மனிதனாக, சுதந்திர புருஷனாக இருப்பதற்கு வழி என்ன? நான் எழுதுவது ஒன்றே வழி. புற உலகில் நான் முழுச் சுதந்திரத்தோடு இருக்கச் சந்தர்ப்பங்கள் துணை செய்யாத சமயத்திலும், மன உலகில் சுதந்திரத்தை இழக்க நான் தயாராக இல்லை. அங்கே நான் விரும்பும் நல்ல காரியங்கள் நடைபெறவேண்டும் நல்ல கருத்துக்கள் விளைய வேண்டும், நல்ல கற்பனைகள் உருவாக வேண்டும். நான் விரும்புகிறபடியெல்லாம் ஜீவன்களையும், சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும், வாழ்க்கையையும் படைக்க வேண்டும். எழுதுவது ஒன்றின் மூலமே என்னைப் பொறுத்த வரையிலும் இது சாத்தியம். இவ்வளவும் மனிதனாக இருப்பதைப் பற்றிய

விஷயம் அடுத்தபடியாக மனிதனாக வாழவிரும்புவதைப் பற்றிச் சில வார்த்தைகள்.

இருக்கிற நிலையிலிருந்து மேல்நிலையை நோக்கிச் செல்லுவதே மனிதனின் லட்சிய யாத்திரை; லட்சிய முயற்சி. இயற்கையின் நியதியே பரிணாமம்தான். இப்படி நான் மனிதனாக வளருவதற்கு எனக்குத் துணை செய்வது என் எழுத்துத்தான். வளரவேண்டும் என்பதற்காக நான் எழுத நினைத்ததில்லை. வளரவேண்டும் என்ற பரிணாம வேட்கை, எழுத்தாக உருவெடுக்கிறது என்பதுதான் உண்மை.

ஆகவே, எழுதுவதால் நான் மனிதனாக இருக்கவும், நான் மனிதனாக வாழவும் மனிதனாக வளரவும் முடிகிற காரணத்தால் எழுதுகிறேன். இப்பொழுது, கண்டவை, கேட்டவை, காண விரும்புபவை, கேட்க விரும்புபவை, பிறரின் சுகதுக்கங்கள் சந்தர்ப்பங்களின் விசித்திரங்கள், அகத்திலும் புறத்திலும் அவ்வப்போது கண்டறியும் உண்மைகள், பொய்கள் —இப்படி எல்லாவற்றையும் பற்றி நான் எழுதி ஒவ்வொரு எழுத்தையும் ஒரு குறிப்பிட்ட முடிவோடு முடிக்கும்போது என் மனித நிலையை உயர்த்தவும், அதன் மூலம் மற்றவர்களின் மனித நிலை உயரவும் அறிந்தோ அறியாத நிலையிலோ விரும்புகிறேன், எழுத்துப் பணியின் உச்ச நிலையில், நான் மற்றச் சகல உயிர் வர்க்கங்களுடனும் ஒன்று கலந்து ஐயக்கியமாகிவிடுவதால். நான் எனக்குச் செய்யும் மனித சேவை, மன்னுயிர் சேவை யாகவும் இருக்கிறது. நான் உயர்ந்தால், உலகமும் உயர முடிகிறது. இப்படிப்பட்ட காரியத்தைக் கலைகளினாலேயே சாதிக்க முடியும். நான் பயின்ற கலை எழுத்து. அதனால் எழுதுகிறேன்.

இந்த மனிதத் தன்மையை விளைநிலமாகக் கொண்டு வளர்ந்து படரும் பல் வேறு கொடிகளே, எழுத்துத்துறையில் நான் செய்யும் பல்வேறு பணிகள். சிலசமயங்களில் நான்கண்ட உண்மையைக் கூறுவேன், நான் பெற்ற இன்பத்தை உணர்த்துவேன். நான் விரும்பும் சீர்திருத்தத்தை வற்புறுத்துவேன். நான் அழிக்க விரும்பும் தீமைகளைச் சாடுவேன். இத்தனையும் செய்யாவிட்டால் மன உலகில் கூட நான் சுதந்திர புருஷனாக இருக்க முடியாது. ஆகவே, சுதந்திரபுருஷனாக இல்லாமல் உயிர்வாழ முடியாது, அதனால் எழுதாமல் இருக்க முடியாது என்ற காரணங்களை முன்னிட்டே நான் எழுதிவருகிறேன் என்பதை என்னைப் பற்றி ஆராய்ச்சியில் கண்டு பிடித்தேன்.

பிரசாரத்துக்காக எழுதவில்லையா, நிர்ப்பந்தத்துக்காக எழுதவில்லையா, பணத்துக்காக எழுதவில்லையா, வாழ்க்கைச் செலவுக்காக எழுதவில்லையா என்றெல்லாம் கேட்கலாம். இத்தனைக்காகவும் நான் எழுதுகிறேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். இன்னும் எத்தனைத்காகவுமோ எழுதுவேன். ஆனால் அடிப்படை என்னவோ ஒன்றுதான். அதில் மாறுதல் இல்லை. அந்த அடிப்படை நான் ஏற்கெனவே கூறிய மனிதத்துவமும் அதனோடு ஜீவ சம்பந்தம் கொண்டுள்ள பரிணாம வேட்கையும், சுதந்திர வாழ்க்கையுமே. இந்த அடிப்படையை மறுத்து, பிரசாரம், நிர்ப்பந்தம், பணம் என்பவற்றை முழுமுதல் காரணங்களாகவோ லட்சியங்களாகவோ கூறிச் சாதிக்க முடியாது, சில சந்தர்ப்பங்களில் சாப்பிட்டும் சாப்பிடாமலும் அதிவேகமாக ரயிலுக்கு ஓடுகிறோம். இதனால் ரயிலுக்குப் போகும் போதெல்லாம் அறைகுறையாகச் சாப்பிடவேண்டுமென்றோ, ஓடத்தான் வேண்டுமென்றோ ஆகிவிடாது அல்லவா? இன்றைய சந்தர்ப்பம் அப்படி யிருந்தது, சாப்பிட்டும் சாப்பிடாமலும் ஓடினோம். ஆனாலும் ரயிலைப் பிடித்துவிட்டோம், ரயிலைத்தான் பிடித்தோம். பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை. ரயிலுக்குப் பதிலாக வேறொன்றைப் பிடிக்கவில்லை என்று நிச்சயம். அதுபோல புறக்காரணங்கள் எவையாக இருந்தாலும் என் எழுத்தின் குறிக்கோள் மாறிவிடவில்லை, ஒருவேளை உள்ளே மறைந்து நிற்கலாம். ஆனால் மாறவில்லை, மாறாது. எனவே சந்தர்ப்பத்தேவைகளையோ, புறக் காரணங்களையோ பெரிது படுத்தி முழுக்காரணங்கள் ஆக்க வேண்டியதில்லை. லட்சியம் தவறும்போதும், தன் ஆத்மாவுக்கும் மனித குலத்துக்கும் துரோகம் இழைக்கும் போதும்தான் அவற்றை அவ்வாறு முழுக்காரணங்கள் ஆக்க முடியும்.

கடைசியாக நான் கூறவிரும்புவது, ஏற்கெனவே கூறியதன் சாரத்தையே. ஒவ்வொரு கலைஞனுக்கும் மனிதனாக வாழவும். மனத்தில் தோன்றியதை வெளிப்படுத்தவும் ஒவ்வொரு கலை சாதகமாக அமைகிறது. எனக்கு அமைந்த எழுத்துக்கலையின் மூலம் நான் என்னையும் நான் வாழும் உலகத்தையும் என் அளவில் உயர்த்த விரும்புகிறேன். என் உள்ளத்தையும் நான் உணர்ந்த பிரபஞ்ச உள்ளத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறேன். இதுவே என் அடிப்படை இயற்கை. இதுவே "எதற்காக எழுதுகிறேன்?" என்ற கேள்விக்கு பதில்.

க. நா. சுப்ரமண்யம்

நான் எழுதத் தொடங்கி சற்றேறக்குறைய முப்பது வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த முப்பது வருஷங்களில் நாலைந்து தடவைகளிலாவது எதற்காக எழுதுகிறேன் என்று நான் என்னையே கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எதற்காகடா இவன் எழுதுகிறான் என்று கேட்பதற்குப் பதில், நமது ஆன்ம விசாரத்துக்கு அவசியமானபடி நானே கேட்டுக் கொண்டு பதில்தர முயலுவது என் எழுத்துத் தரத்தை உயர்த்த உபயோகப்பட்டிருக்கிறது என்றுதான் நான் எண்ணுகிறேன்.

ஆரம்ப காலத்தில் நான் எழுதத் தொடங்கியது ஆங்கிலத்தில். கல்லூரியில் படிக்கும்போதெல்லாம் நான் தமிழில் எழுதுவது பற்றிச் சிந்தித்ததுகூடக் கிடையாது. கல்லூரிப் பாடமாக இல்லா விட்டாலும், விரும்பித் தமிழ் படித்ததுண்டே தவிர, தமிழில் எழுத வேண்டும், நான் எழுதக் கூடும் என்று எண்ணியதுகூட இல்லை. எஸ். எஸ். எல். சி. படிக்குமுன்னரே நான் எழுதத் தொடங்கி விட்டேன். என்னுடைய எழுதும் லக்ஷியத்தை என் தகப்பனார் அடி நாட்களிலேயே வளர்த்துவிட்டார். நான் எதற்காக எழுத வேண்டும் என்பது பற்றி அவருக்குச் சந்தேகம் இல்லை. அவர் தனது வாலிப பருவத்தில் எழுத விரும்பியவர்—அவர் ஆசை பல காரணங்களால் நிறைவேறவில்லை. நிறைவேறாத தன் ஆசை என் மூலம் நிறைவேற வேண்டும் என்று அவர் தீர்மானித்து என்னை எழுதத் தூண்டினார். அதற்காகவே ஆரம்பத்தில் நான் எழுதினேன். கவிதையில் என் தகப்பனாருக்கு அவ்வளவாக நம்பிக்கை

கிடையாது — அந்த நம்பிக்கையின்மை இன்னும் என்னைப் பீடிக்கிறது என்று சொல்வது மிகையே யாகாது. வசனத்தில் பல துறைகளிலும் எழுதிப் பார்க்க வேண்டும் என்று என்னைத் தூண்டிவிட்டார் என் தகப்பனர்.

என்னுடைய முதல் ஆங்கிலக் கட்டுரை நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது வெளி வந்தது — 1928ல். அதிலிருந்து 1934 வரையில், எதற்காக எழுதுகிறேன் என்கிற சிந்தனையே யில்லாமல் ஆங்கிலத்தில் பல கட்டுரைகள், கதைகள் எழுதினேன் அவற்றில் பல, சற்றேறக்குறைய ஐம்பது அறுபது, இந்தியப் பத்திரிகைகள் பலவற்றிலும், வெளி நாட்டுப் பத்திரிகைகள் சிலவற்றிலும் வெளிவந்தன.

சென்னையில் 1934, 1935ல் ஒரு அறை வாடகைக்கு வைத்துக்கொண்டு ஆங்கிலத்தில் எழுதி வெற்றி என்று சொல்லப் படுவதைக் கண்டுவிடுவது என்று முயன்று கொண்டிருக்கும்போது தமிழில் அச்சமயம் சென்னையில் நடந்து கொண்டிருந்த இலக்கிய முயற்சிகள் என் கண்ணில் பட்டன. டி. எஸ். சொக்கலிங்கம் அப்போது நடத்திக் கொண்டிருந்த 'காந்தி' என்கிற பத்திரிகையில் வெளிவந்த வத்திலக்குண்டு எஸ். ராமய்யா என்பவரின் வார்ப்படம் என்கிற கதைதான் முதல் முதலில் எனக்குத் தமிழில் எழுதவேண்டும் — இதுமாதிரி எழுதவேண்டும் என்கிற எண்ணத்தை உண்டுபண்ணியது. சில நாட்களில் மணிக்கொடி என்கிற முயற்சியும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. தமிழில் எழுதுவதுதான் ஆன்மீகமான ஒரு காரியம், ஆங்கிலத்தில் எழுதுவது என்ன சொன்னலும் உள்ளத்தைத் தொட்டும் தொடாமலும் விட்டுவிடும் என்று தோன்றிற்று. தமிழில் எழுதத் தொடங்கினேன்.

எதற்காக எழுதுகிறேன் என்று கூறுகிற இடத்தில் இந்த என் சுயசரிதமும் அவசியம் என்றே எனக்குப் படுகிறது, எதற்காக எழுதுகிறேன் என்கிற கேள்விக்கு ஹாஸ்யமாகப் பதில் தரலாம் பொறுப்பில்லாமல் பதில் தரலாம், — இதுவரை நான் இந்தக் கேள்வியை என்னையே கேட்டுக் கொண்டதில்லையே என்று கூறலாம்—எனக்குத் தெரியாது என்று பதில் தரலாம். எத்தனை இலக்கியாசிரியர்கள் இருக்கிருர்களோ அத்தனை விதமான பதில்கள் கிடைக்கலாம். நமக்கு, ஒவ்வொன்றும் அந்தந்த அளவில் உண்மையானதுதான் — உண்மை யல்லாததும்தான். பணத்துக்காக எழுதுகிறேன் என்று நான் சொன்னல் அது உண்மையாகிவிடுமா ? உலக இலக்கிய சரித்திரத்தில் எழுதிப் பணம் பண்ணியவர்கள் பத்தாயிரத்தில் ஒருவர் இருவர்தான் உண்டு. மற்றெல்லோருக்கும் தெரிந்த இந்த உண்மை இலக்கியாசிரியனுக்கு மட்டும் தெரியாதா என்ன ? பணம் பண்ணுவதற்கு வேறு நிச்சயமான வழிகள் இருக்கும்போது எழுதுவதை நம்பி, லாட்டரிச் சிட்டு வாங்குவதுபோல, காத்துக் கிடப்பானேன்.

பணம் ஒரு அம்சம், புகழ் என்பது ஒரு அம்சம். இதுவும் பணம் என்கிற லக்ஷியத்தைப் போலவே ஒரு அரைக்கால் உண்மையாக இருக்கும்—அரை உண்மை கூட அல்ல. எழுதுவதால் சமூகத்தில் நமது அந்தஸ்து உயருகிறது என்று—உயருகிறதா என்று அவநம்பிக்கைப் படுகிறவர்களுக்கு இடையில்கூட — தோன்றவாம், பத்திரிகைக்காரர்கள் பத்திரிகைகளின் பக்கங்கள் நிரம்பியாகவேண்டுமே என்பதற்காக எழுதலாம் — தொடர்கதை ஆசிரியர்களும் அப்படித்தான். பக்கம் நிரம்பியாக வேண்டும் — அந்த வாரத்து வாசகர்களை ஏமாற்றிவிடக்கூடாது என்றுதான் தொடர்கதை ஆசிரியர்கள் எழுதுகிருர்கள். அவர்கள் எழுத்து விலத்தியாகவும், கட்டிடம் கட்டிமுடிக்கும்போதே ஆட்டம் தருவதாகவும் இருப்பதில் ஆச்சரியம் இல்லையே ! தொடர்கதை இலக்கணமே அதுதான். விதிவிலக்குகள் உண்டு - ஆனல் அவை அபூர்வம்.

எதற்காக எழுதுகிறேன் என்று என்னையே நான் கேட்டுக் கொள்கிற கேள்விக்கு ஆன்மீகமான, என் உள்ளத்தில் இடம்பெறுகிற ஒரே ஒரு பதில்தான் உண்டு. இலக்கியாசிரியன் எந்த மொழியில் எழுதினலும் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் தனது ஆன்மீகமான ஒரு வளர்ச்சியை நாடித் தான் செய்கிருன். இந்த சூழ்நிலையில் 1950—1960 என்கிற சந்தர்ப்பத்தில் ஆன்மீகம் என்ருல் ஏதோ ஒரு ஒதுக்கப்படவேண்டிய ஒன்று, சின்மயானந்தாவின் பிரசங்கங்களில் மாலை வேளைகளில் காணப்படுவது என்று கருதப்படுகிறது. கலை, இலக்கிய சிருஷ்டி என்பது ஆன்மீகமான ஒரு காரியம் என்பதே நம்மில் பலருக்கு மறந்து விடுகிறது. சமூகம் என்பார்கள்; சமுதாயம் என்பார்கள்; சூழ்நிலை என்பார்கள்; மரபு என்பார்கள்; பண்பாடு என்பார்கள்; கருத்து என்பார்கள். ஆனல் இவற்றையெல்லாம் மீறிய, வார்த்தைகளுக்கு அகப்படாத ஒரு அம்சம் ஆன்மீக அம்சம். இதை மறந்து விட்டுப் பேசுகிற எந்தக் கலையைபற்றிய பேச்சுமே பூரணமானதாக இருக்கமுடியாது.

ஆன்மீகமானது என்று சொல்வது பற்றிக் சற்றுத் தீர விசாரித்துப் பார்த்தால் புரியவரும் - கலைத் தொழில் எல்லாம் சுதந்திரமானது - எவ்விதமான கட்டுப்பாட்டுக்கும் உட்படாதது - தானே தனது ராஜ்யத்தை அமைத்துக் கொண்டு அதில் செயல்படுவது என்பது. இந்த ஆன்மீக நிலையிலே எல்லாக் காரியங்களுமே ஆனந்தமயமானவை. இந்த ஆனந்தமயமான விளையாட்டை எனக்குள் நானே அனுபவித்துக் கொள்ளவே தான் நான் எழுதுகிறேன் என்று ஒவ்வொரு இலக்கிய ஆசிரியனும் சொல்லக் கூடும், இலக்கியத் தொழிலை ஆன்மீகமயமானதாக உணர்ந்து விட்டால்.

ஆன்மீகம் என்பது ஏதோ சில தனிப்பட்ட மனிதர்களுக்கு மட்டும் உரிய சொத்தாக எண்ணி இன்று நாம் ஒதுக்கிவிடுகிருேம். இந்தியா அப்படி ஒன்றும் ஆன்மீகத்தை உணர்ந்த தேசமல்ல என்று சொல்லி அதற்கு வாதம் எதிர் வாதம் கிளப்பிவிடுகிற நிலைகூட ஏற்பட்டு விட்டது இப்போது. ஆன்மீகம் என்கிற வார்த்தையே கூட கொலை கொள்ளை சதி போன்ற தகாத கெட்டதான வார்த்தையோ என்று நினைக்கக் கூடிய அளவுக்கு நம்மிடையே தவருக வளர்ந்து விட்டது. ஆனல், உலகம் பூராவும், எல்லா மனிதர்களுக்குமே இந்த ஆன்மீகம் என்பது பொதுவானதோர் விஷயம்தான். அதைத் தப்ப விரும்பினலும் தப்பமுடியாது - தெரியாமல் இருக்கலாம் - பிரக்ஞையில் தட்டுப்பட விடமாட்டேன் என்று, நாத்தழும்பேற நாத்திகம் பேசுகிறவன் கூட கடவுளையே பற்றிப் பேசிக் கொண்டிருப்பதுபோலப் பேசலாம்.

உலகத்தையும், உலகத்தில் நடப்பதையும் சாட்சியாகக் கண்டு, சொந்த விஷயங்களையும்கூட

ஈடுபாடில்லாமல், பற்றின்மையுடன் சாட்சி பூதமாகக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்பது வேதாந்தத்தின் லக்ஷியம். காண்பதையும் நடப்பதையும் உண்மையென்று நம்பிவிடக்கூடாது என்பது அதன் லக்ஷியம். இந்த லக்ஷியம் கலைபற்றி, முக்கியமாக எழுத்துக் கலைபற்றி எத்தனை தூரம் உண்மை என்பது சற்று சிந்தித்துப் பார்த்தால் தெரியவரும். முழுக்க முழுக்க இதுதான் உண்மை. ஈடுபாடில்லாமல் கண்டு, கண்டதைத் திரும்பச் சொல்லி, பிறரையும் அதே போலக் காணச் செய்வதுதான் கலையின் லக்ஷியம். காண்பதிலும், கண்டதைத் திருப்பிச் சொல்வதிலும் ஆனந்தம் காண்பதே இலக்கியாசிரியர்களின் லக்ஷியம். இந்த ஆனந்தத்துக்காகத்தான் நான் எழுதுகிறேன்.

கவிதை, கதை, நாவல், நாடகம் போன்ற துறைகளில் இந்த லக்ஷியம் உண்மையாக இருக்கலாம். விமர்சனம் போன்ற துறைக்கும் இது பொருந்துமா என்று பார்க்கும்போது பொருந்தும் என்று தான் சொல்லத் தோன்றுகிறது. தான் கண்ட காட்சியை—அது உலகக் காட்சியாக இல்லாமல், எழுத்துலகக் காட்சியாக இருப்பதுதான் விமர்சனத்தின் தனி விசேஷம்—திருப்பி எடுத்துச் சொல்வது தான் விமரிசனமும்.

ஒரே சம்பவத்தை அடிக்கடித் திருப்பிச் சொல்லி நமது காதைத் துளைத்துக் கொண்டிருப்பவனை நாம் "போர்" என்கிறோம். "இதை ஏற்கெனவே கேட்டிருக்கிறோம். வேறு புதுசாக இருந்தால் சொல்லு" என்கிறோம். ஆனால் கலைஞனும், நல்ல இலக்கியாசிரியனும் இதையேதான் செய்கிறான். தான் கண்டதைத் திருப்பிச் சொல்லுகிறான்—அவன் புது உலகத்தையே சிருஷ்டித்திருக்கிறான் என்று விரும்பிப் படிக்கிறோம்—திரும்பத் திரும்பப்படிக்கிறோம். மாக்பெத்தைப் படிப்பதில் நமக்கு அலுப்புத்தட்டுவதில்லை; சிலப்பதிகாரத்தில் எத்தனையோ பகுதிகளை ஒருவிதமான கட்டாயமுமில்லாமல் படித்து ஆனந்தித்திருக்கிறோம்.

இலக்கியம் சிருஷ்டிப்பதில் ஏற்படுகிற ஆனந்தத்தை, வேறு புலனின்பங்கள் தருகிற இன்பத்துடன் ஒப்பிட்டு, வார்த்தைகளில் முடிவுகண்டு சொல்ல முயலுவதில் லாபம் இல்லை. அந்த ஆனந்தம் ஆன்மிகமானது—இலக்கியாசிரியனின் மிகச் சிறந்த வார்த்தைகளுக்கும் அகப்படாதது—பிரும்மாவைப் போல, கூட இருக்கலாமே தவிர, தனியாக உணர்த்தவோ, உரைக்கவோ முடியாது.

தமிழில் எழுதுவதில் இந்த ஆனந்தத்தை வளர்த்துக் கொள்வது தான் எனது முயற்சியாக இருந்து வந்திருக்கிறது—எனது ஆன்மிகமான ஆனந்தத்தின் விளைவாக எழுதப்பட்ட என் கதைகளையோ, கவிதைகளையோ, நாடகங்களையோ, நாவல்களையோ யார் அங்கீகரிக்க மறுத்தாலும், அதனால் சமுதாயத்துக்கோ மற்றவர்களுக்கோ ஒரு லாபமும் இல்லை என்று யார் ஒதுக்கிவிட்டாலும்கூட எனக்கு இதைவிடச் சிறந்த அனுபவம் வேறில்லை—வேறு அவசியம் என்றும் நான் நினைக்கவில்லை.

சுயசரிதம் பேச யாருக்குத் தான் பிடிக்காது—ஆகவே இன்னொரு சுயசரிதக் குறிப்புடன் இதை முடிக்கிறேன். 1951க்குப் பிறகு மீண்டும் நான் ஆங்கிலத்தில் எழுதத்தொடங்கினேன். ஆரம்பகாலத்தில் எழுதிய ஆங்கில எழுத்துக்களைவிட இந்தக்காலப் பகுதி எழுத்து, எனக்கே அதிகத் திருப்தியும் ஆனந்தமும் தருகிறது. இன்றைய இந்தியாவில் எழுதுகிற இலக்கியாசிரியன் இரண்டு மொழிகளில் எழுதுகிறவனாக இருப்பதுதான் நல்லது—இரண்டிலும் இலக்கிய சிருஷ்டியின் ஆனந்தத்தைக் காணமுடியும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அந்த ஆனந்தம் ஒன்றுதான் எழுதுவதில் எனக்குக் கிடைக்கிற லாபம் என்று சொல்லி முடிக்கிறேன்.

௫. பிச்சமூர்த்தி

பிக்ஷு என்கிற பெயரில் கதைகளும், சொந்தப் பெயரில் அற்புதமான பல சிறு கதைகளும் எழுதியுள்ளவர். முப்பது வருஷங்களுக்கும் அதிகமாக இலக்கிய துறையில் ஈடுபட்டுள்ளவர். வக்கீலாக சிறிதுகாலம் தொழில் நடத்திவிட்டு, பின்னர் இந்துமதப் பரிபாலன நிலையத்திலும், பத்திரிகைத் துறைகளிலும் ஈடுபட்டுள்ளார். அவர் எழுத்திலும் பேச்சிலும் அடக்கமும் அமைதியும் தெளிவாகத் தெரியும்.

வாழ்நாளில் புகழடைவதோ அல்லது புகழ் உடம்பைப் பெறுவதோ கலைஞனின் நோக்கமன்று. விதை வெடித்துச் செடியும் கொடியும் மரமும் பூவும் காயுமாவானேன்? அதுதான் அதன் தன்மை, அதன் தர்மம். விதைக்குப் புகழோ புகழுடம்போ பெறவேண்டிய ஆசை இருக்க முடியாது. விதை என்னும் உயிரின் பரிணாமமே மரமும் கனியும். அதற்கு தர்க்க ரீதிக்குட்பட்ட பொருள் கிடையாது. அணு அகண்டமாவதுதான் தர்மம், இன்பம். விதை செய்யும் காரியமும் இதுதான்.

உண்மையில் கலைஞனும் விதையைப்போல. பணமும் புகழும் பிரசாரமும் கலைக்கு நேரடியான காரணங்கள் அல்ல. புஷ்பத்தை சந்தையில் விற்கலாம். ஆனால் வியாபாரம் நடத்துவதற்காக மல்லிகை மலர்வதாக நினைத்துவிட முடியாது. கலை சிருஷ்டியைபோல இயற்கையைப்போல. இவற்றினால் "பிரயோசனம்" இல்லை என்பதைத்தான் திரித்து வாழ்வாவது மாயம் என்கிறார்கள். ரோஜாவினால் என்ன பிரயோசனம்? நத்தை கொசு காண்டாமிருகம் இல்லாவிட்டால் என்ன மோசம்? ஆனால் மோசம் நாசம், நஷ்டம், உபயோகம் ஆகிய மதிப்பீடுகள் இயற்கையின் அகராதியில் இல்லை. சிருஷ்டி இயற்கையின் லீலை, ஆன்மீக விளையாட்டு.

அணு அகண்டமாவதே கலை என்றேன். வாழ்வின் மர்மம் இந்தத் தத்துவத்தில்தான் அடங்கி இருக்கிறது. இனத்தைப் பெருக்க வேண்டும் என்னும் அந்தரங்க ஆவல் இல்லாதவர் யாரேனும் உண்டா? இல்லாவிட்டால் குழந்தை இல்லாதவர்கள் ஏன் வேதனைப் படவேண்டும்? மற்றவர்கள் அவர்களிடம் பரிவு காட்டவேண்டும்? ஆனால் இந்தத் தூண்டுதலை அறிவின் ஆட்சிக்கு உட்பட்டதாக இயற்கை அமைக்கவில்லை. சொல்லப்போனால் வாழ்வின் இன்பத் தூண்டுதல்கள் பலவற்றையும் அறிவின் ஆதிக்கத்துக்குட் படுத்தாமல் உணர்வில் இயற்கை ஆழ விதைத்திருக்கிறது. இவ் விதைகள் ஆழத்தில் வெடித்தியங்குவதால்தான் அமைதி இன்மையும் நிலைகொள்ளாத் தன்மையும் அவ்வப்பொழுது தோன்றி நம்மைத் திகைக்க வைக்கின்றன.

இந்த ஆழ்ந்த தூண்டுதல் ஒன்றின் விளைவுதான் குழந்தைகள்; இனப்பெருக்கென்னும் காம்பில்

வெடித்த ஒரு மலர். ஆதே காம்பில் வெடிக்கும் மற்றொரு மலர் கலை. இனப் பெருக்கின் தூண்டுதல் குழந்தைகளை விளைவிப்பதுபோல், தற்பெருக்கு, தன்னையே பெருக்கிக் கொள்ளும் ஆவல், தன்னணுவை அகண்டமாக்கிக் கொள்ளும் மறைமுக வேட்கை, கலையை விளைவிக்கிறது.

தன்னையே பெருக்கிக் கொள்ளும் உணர்வு அதிகம் படிக்காதவர்களிடத்தும், கொஞ்சம் எழுதத் தெரிந்த சிறுவர்களிடத்தும், கூட உண்டு. சாதாரண மக்கள் சிறுவர்கள் ஆகியோரிடம் ஒரு பென்சில் கிடைத்துவிட்டால் தங்கள் பெயரை எவ்வளவு தரம் எழுதிப்பார்த்துக்கொள்கிறார்கள். சந்து பொந்துகளில் உள்ள கவரில் என்னென்ன கதை எல்லாம் எழுதிவிடுகிறார்கள்? ஆற்றிலே கிளிக்கூண்டு கட்டும்பொழுதும், காட்டாமணக்குக்காய் கொண்டு தேரைக் கட்டித் தெருவில் இழுக்கும்பொழுதும் நடப்பது இதுவே.

அணு அகண்டமாவதுதான் இயற்கையின் தருமம் ஆனாலும் இது ஒரே வழியைக் கடைப்பிடிப்பதில்லை. சுய அறிவற்ற ஜீவராசிகளை நீக்கிப் பேசினால் மனிதன் பல வழிகளை இதற்காக வகுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். ஞானி தன் செய்கை என்பதற்று அகண்டாகார மடையப் பார்க்கிறான். பக்தன் காதல் என்னும் வழிபற்றி அகண்டாகார மடையப் பார்க்கிறான். கர்மயோகி அணுவை அகண்டத்துடன் இணைத்து இச்சேர்க்கைக்குப் பொருந்திய செயல்புரிகிறான். இருப்பினும் மூவருடைய லக்ஷியமும் ஒன்றே.

இதே நோக்கம் கொண்டவர்கள்தான் விஞ்ஞானிகள். அறிவுக்குப் பிடிபடாத சிருஷ்டியைக் கண்டு பிரமை அடைந்து அதன் மர்மத்தைச் சோதித்து அறிய முயலுகிறார்கள். காலத்தையும் தூரத்தையும் வழக்கமான காரண காரியத் தொடர்பையும் கடக்க முயலுகிறார்கள்.

இவற்றிற் கெல்லாம் வேறுபட்ட முறை உண்டு. அதுவே கலை. கலைஞனும் தன்னுள்ளே இருக்கும் அணுவை அகண்டமாக்கப் பார்க்கிறான். கல், மண், மரம், வர்ணம் முதலிய பொருள்களைக் கொண்டு சிற்பி முதலியோர் இச்சாதனையைத்தான் செய்கிறார்கள். சொல்லைக் கொண்டு விரிவையும் ஆழத்தையும் உணர்வில் தருபவன் கவி, எழுத்தாளர். ஓசையைக் கொண்டு விரிவடைபவன் இசைவல்லோன்.

அணு எப்படி அகண்டமாகக் கூடும்... இயற்கையில் பலவித இடையூறுகள் இருக்கும்பொழுது? காலம், தேசம், நடைமுறை, தனி உயிரின் எல்லைகள் ஆகியவை இருக்கும்பொழுது? இந்த எல்லைகளை எப்படிக்கடப்பது? கலைஞனிடம் கற்பனை உணர்ச்சி என்னும் ரசக்கல்கள் இருக்கின்றன. அவற்றின் உதவியினால் கலைஞன் மலராகவும், மனிதனாகவும், விலங்காகவும் விண்மீனாகவும், சிருஷ்டியின் எல்லாப் பொருள்களாகவும் உருமாற்றிக் கொர்ண்டு அந்தந்த அவஸ்தையை அடைகிறான். அதன் விளைவாக சிருஷ்டி செய்கிறான். கலைஞன் இவ்விதமாக அகண்டாகாரமடைகிறான். உணர்வின் வழியே ஒன்றுபட்டு உலகின் இன்ப துன்பத்தைத் தனதாக்கி உலகுக்கும் ஆக்கிக் காட்டுகிறான்.

கலைஞனுக்குச் சொல்வது எழுத்தாளனுக்கும் பொருந்தும். அவனும் ஒரு கலைஞன்தானே !

ஆனால் ஒன்று : கலைஞன் என்றொரு தனிச்சிருஷ்டி இல்லை. அவனும் ஒரு மனிதன்தான். மனிதன்தான் இந்தவித சிருஷ்டிகளைச் செய்கிறான் ! வேறெந்த பிராணியும் செய்வதில்லை. மனிதனுக்காகத்தான் சிருஷ்டி செய்கிறான்; ஏனென்றால் வேறெந்த பிராணிக்கும் இவற்றை அனுபவிக்கத் தெரியாது. மனிதனுக்குள்ளே கலைஞன் இருக்கிறான்; கலைஞனுக்குள்ளே மனிதன் இருக்கிறான்.

நான் ஒரு மனிதன். எனக்குள் ஒரு கலைஞன் இருக்கிறான். ஆகையினால் எழுதுகிறேன். ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்ப்பது வாழ்வில் சகஜம் ; ஆனால் எனக்குள் இருப்பவர்கள் இருவர்களுக்கும் இவ்வித்தை பயில இடம் கொடுப்பதில்லை.

(97–ஆம்-பக்கத் தொடர்ச்சி)

பூரணமாக பார்த்துவிடுகிறது என்று சொல்வதுக்கு இல்லை. ஆகவே என் படைப்புகளால் நான் உணர்த்த விரும்பி இருப்பதாக எனக்குப்படும் என் உத்தேசம் சரியானதா என்பதே என் முன் ஒரு கேள்விதான். இன்னொன்றும் கூட, நான் அழுத்தி இருப்பதாக கருதுவது அழுத்தப்படாமல் இருப்பதாகவும், அழுத்தம்வேறு இடத்தில் வேறுவிதமாக விழுந்திருப்பதாகவும், கூட அவைகளுடன் தொடர்பு கொள்பவர்களுக்குப் படலாம்.

என்வே ‘எதற்காக எழுதினேன்’ என்ற கேள்விக்கு நான் சவுகர்யமாகவும் தொல்லை இல்லாமலும் சொல்லக் கூடிய பதில் இதுவாக இருப்பது உசிதமானது. ‘நான் எழுதி இருப்பதில் என்ன இருக்கிறதோ அதுக்காகத்தான்.’ அது உங்களை வாயடக்கி விடக்கூடும். சாக்ரடீஸுக்கு பதில் சொல்லாமல் இருந்து விட்டவர்கள் ‘what a poem means is simply itself என்று கருதி பேசாமல் இருந்திருக்கக்கூடும் என்று யூகிக்கிறார் அஃபர்கிராம்ஃபி. அதுதான் சரி என்று நானும் நினைக்கிறேன்.

என் படைப்பை வைத்துதான் நான்-இந்த கேள்வி கேட்க தகுதி பெறுகிற நான், அந்த படைப்பு நேரெதிரில் தன் உத்தேசத்தை காட்ட இருக்கிறபோது, என்னை எதற்காக எழுதுகிறாய் என்று கேட்பதைவிட அல்லது எதறகாக எழுதுகிறேன் என்று கேட்டுக்கொள்வதைவிட, அந்த படைப்பு என்ன உத்தேசத்தைக் காட்டுகிறதி, நோக்கத்தை வெளியிடுகிறது என்று அதன் வார்த்தைகளிலிருந்தே அறிந்து கொள்ள முற்படுவது லாபகரமானதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஒரு படைப்பாளியை மடக்கிக் கேட்டபோது, ‘எதற்காக எழுதினேன் என்று எனக்கே தெரியாது என்றார். எதற்காக எழுதப்பட்டது என்பதை அவர் படைப்பு சரியாக திட்டவட்டமாக நமக்கு தெரிவிக்கக்கூடுமல்லவா தன் வார்த்தைகள் மூலம்? அதுதான் வேண்டும் நமக்கு.

நான் எதுக்காக எழுதுகிறேன் என்று விளக்க எனக்கு மன இணக்கமும் அவ்வளவாக இல்லை. அல்லது என்னால் முடியக்கூடியதாகவும் தோன்றவில்லை. இருந்தாலும் எதோ சமாதானம் சொல்லிப்பார்த்தேன். எனக்கு திருப்தி இல்லை; உங்களுக்கும் இருக்காது என்றே நினைக்கிறேன்.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5.